www.tamilarangam.net

சஞ்சீவி

Chanchive

25.Udgave

# சஞ்சீவி

மலர் - 25



P'RAYA
87 RUE DE COLOMBES
92600 A?NIERES SUR -
- SEINE FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




1993

# சஞ்சீவி

மலர் - 25

கார்த்திகை - மார்கழி

பக்கம் உள்ளடக்கம்

3. நோக்கு

7. சன் ஒரு வரலாற்றுத்தடயம்

11. கவிதை - நிரம்பல்

12. ஃபிலாமோனிக்

23. கு. போட்டி இல: 22

26. கடிதங்கள்

30. கவிதை - ஒருவன்

39. கதை - மாற்றம் என்பதே ஒரு ஊமை நாடகம்

51. கம்யூனிசத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டதா?

<<அட்டைப்பட விளக்கம்>>

மறக்கப்பட்ட மனிதங்களின் ஏக்கங்களும் - வாழ்நிலையும்!

சஞ்சீவியின் தொடர்புகளுக்கு:

CHANCHIVE
Danmarksgade.10
7500 Holstebro
DANMARK

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

இழப்புக்களே வழமையாகிப்போன எமது தாய்மண்ணில் கடந்த சிலவாரங்களாக நடைபெற்ற பூநகரித் தாக்குதலிலும் பல உயிரிழப்புகள் ஏற்பட்டது யாவரும் அறிந்ததே. இந்தத் தாக்குதலில் போராளிகள் என்ற பேரில் பலசிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் உட்பட பலபொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். பிள்ளைகளை இழந்து பெற்றோரும், கணவன்மாரை இழந்து மனைவிமாரும், பெற்றோரை இழந்து குழந்தைகளும் பரிதவிக்கும் இவ்வேளையில் சஞ்சீவியின் 25வது மலர் இன்று உங்கள் கையில் கிடைத்திருக்கின்றது.

அன்று பிள்ளையார் படத்துடன் ஆரம்பித்து இன்று 25வது மலர் வரையில் ஏற்பட்ட மாற்றம், வளர்ச்சி வாசகர்கள் அறிந்ததே. சாதாரணமாக 25 மலர்களை வெளியிட்டு ஒரு வெள்ளி விழாக் கொண்டாடும் நோக்கத்துடன் இம் மலரை நாம் இங்கு வெளியிடவில்லை. இந்த 25 மலர்கள் வரையிலும் இந்தச் சஞ்சீவியானது என்ன சொல்லியிருக்கிறது, என்ன செய்திருக்கின்றது என்பதை நினைவுபடுத்திக் கொள்வதே இந் நோக்கின் வெளிப்பாடாகும்.

சஞ்சீவியானது இன்று வரையிலும் பலதரப்பட்ட கருத்துக்களை வாசகர்களாகிய உங்கள் முன் வைத்திருக்கின்றது. வைக்கப்பட்ட கருத்துக்களில் இந்நாட்டு வாழ் தமிழ்க்குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கருத்துக்கள், இந்த நாட்டில் வளர்ந்துவரும் நிறவெறிக்கெதிரான கருத்துக்கள், எம்நாட்டு அரசியல்ரீதியான கருத்துக்கள் போன்ற முக்கிய கருத்துக்களோடு வேறுசில பொதுவான கருத்துக்களையும் வெளிக்கொணர்ந்திருந்தோம். இந்நாட்டு வாழ் தமிழ்க் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி சென்ற காலங்களில் சில சிறுவர்மலர்களை வெளியிட்டிருந்தோம். 1992ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது கலந்துரையாடலின் போது சில முடிவுகள் எடுக்கப்பட்டு சிறுவர் மலர்களை இடை நிறுத்தி வைத்திருந்தோம். மேல் லையூரான் அவர்கள் எழுப்பிய கேள்விகளில் இந்த மலரா-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

து எந்த வயதுக்குரியவர்களுக்கு? எத்தனையாம் வகுப்பிற்குரியவர்களுக்கு? என்ற கேள்விகளை எழுப்பியதால், அந்த மலரை பொதுவாக எல்லாக் குழந்தைகளுக்குமாக கொண்டுவரவேண்டும் என்ற நோக்கம் கருதி அதை நிறுத்தி வைத்திருந்தோம்.

அந்தச் சிறுவர்மலர்கள் குழந்தைகள் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வரவேற்புப்பெற்றதை யாரும் மறுக்கவோ, மறைத்து விடவோ முடியாது. இச்சிறுவர்மலர் நிறுத்திவைக்கப்பட்ட கால இடைவெளியில் டென்மார்க்கில் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்கான ஒரு பாடத்திட்டத்தை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் ஆங்காங்கே எடுக்கப்பட்டிருப்பது யாவரும் அறிவோம். ஆனால் இன்று இப்பாடத்திட்டமானது எப்போது வெளிவரும், யாரால் வெளிவரும் என்ற பிரச்சனைகள் எழுவதாலும் அதன் தாமதத்தினாலும் நாங்கள் மீண்டும் சிறுவர்மலரை முன்பு வெளியிட்டது போல சிறுமாற்றங்களுடன் 1994ம் ஆண்டு வெளியிடலாம் என்று விரும்புகின்றோம்.

இந்த சிறுவர்மலரை நாம் எமது எண்ணப்படி வெளியிட விரும்பாமல் பெற்றோர், குழந்தைகளின் விருப்பங்களுடனும் வேறு ஆலோசனைகளுடனும் வெளிக்கொணர விரும்புகிறோம். இதை வெறும் கருத்தாக எடுத்துக் கொள்ளாமல் சிறுவர்மலரின் அடுத்த நடவடிக்கைக்கான உங்கள் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.

என்றும் இல்லாதவாறு டென்மார்க்கிலும் வேறு ஐரோப்பியநாடுகளிலும் இனவெறியானது நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே போகிறது. குறிப்பாக டென்மார்க்கில் அதன் வேகமும் வளர்ச்சியும் அதிகரித்துக் கொண்டு போவதற்கு இங்கு நடைபெறும் சம்பவங்களே சான்றாகும். உதாரணமாக 16.11.93 அன்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் நிறவெறியை முதன்மையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கட்சிகள் இன்று பல இடங்களில் வெற்றி பெற்றதும் யாவரும் அறிந்ததே. Struer என்னும் நகரில் "கொல்க டன்ஸ்க" என்ற ஒரு கட்சி ஒரு குறிப்பிட்ட சிலமாதங்களுக்கு முன்னர் ஆரம்பமானது( மலர் 24 இதழில் இது பற்றிக் குறிப்பிட்டிருந்தோம் ) இத் தேர்தலில் போட்டியிட்டு KOMMUNE (உள்ளூராட்சிமன்றம்)ல் ஒரு இடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

காலத்திற்குக் காலம் நிறவெறியை மேற்கொள்ளும் கட்சிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்களுக்கென ஒவ்வொரு சின்னத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள். மேற்குறிப்பிட்ட கட்சியின் சின்னத்துக்குரிய Holker என்பவன் பழைய டெனிஸ் சரித்திரத்தில் வரும் ஒரு சமூககாவலாளன். அதாவது டெனிஸ் மக்களுக்கு பிரச்சனைகள் தோன்றுமிடத்து அங்கே தோன்றி அந்தப் பிரச்சனையிலிருந்து டெனிஸ் மக்களை விடுதலையடையச் செய்வான். இக்கதையானது இன்று காதுவழிக் கதையாகவும் சொல்லப்படுகிறது. அதன்பின் அவனுக்கு 'கும்பன் ஹவ்ன்"ல் ஒரு சிலையை உருவாக்கினார்கள். இது தொடர்பான செய்திகள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இது போன்றே இலங்கையிலும் இனவெறியர்கள் சிங்களமக்கள் மத்தியில் துட்டகைமுனுவைப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

எங்களுடைய வாழ்க்கை முறைகள் போலல்லாது தாமொன்று தன் குடும்பமொன்று என்று வாழும் இந்த டெனிஸ் மக்கள் மத்தியில் இப்படியான புராதன கதைகளில் வரும் கதாநாயகர்களின் பெயரை இந்தக் கட்சிகளுக்கு வைப்பதால் டெனிஸ் மக்கள் மத்தியில் சுலபமான முறையில் நிறவெறியை வளர்த்தெடுக்க முடிகிறது.

அத்துடன் இந்நாட்டில் வளர்ந்து வரும் பொருளாதார நெருக்கடிகளும், டென்மார்க்கிலுள் அகதிகளின் வருகை நாளுக்கு நாள் கூடிக்கொண்டு போவதாலும், இங்கு ஏற்கனவே வாழும் அகதிகள் தங்கள் அகதி அந்தஸ்தை மறந்து இந்நாட்டு மக்களையே இம்சிக்கும் அளவு அட்டகாசங்கள் செய்கின்ற நிகழ்வுகளும் இங்கே இனநிறவெறி அமைப்புக்கள் வளர உரமாக அமைகின்றது.

இதேவேளையில் இனநிற வெறியர்களுக்கெதிரான அமைப்புக்களும், தனிநபர்களும் இருப்பதை நாம் மறந்துவிட முடியாது. எமது அகதிநிலையை மறந்த அடாவடித்தனங்களால் எமக்கு ஆதரவு தரும் நல்லெண்ணங் கொண்ட மனிதர்களையும் அமைப்புக்களையும் மேலும் சோர்வடையச் செய்வதுடன், அவர்களை நெருக்கடிக்கும் உள்ளாக்குகின்றோம்.

இரண்டாம் உலக யுத்த சம்பவங்களான சில செய்தித்திரைப் படங்களை நாம் அனைவரும் அடிக்கடி T.V. ல் பார்க்கின்றோம். பெருங் கிடங்குகளில் பல எண்ணிக்கையற்ற பிணங்களை குப்பை கொட்டுவது போல வாரித் தள்ளுவதை நாம் பார்த்திருக்கின்றோம். அந்தப் பிணங்-

www.tamilarangam.net

கள் பசியாலும், பட்டினியாலும், யுத்தத்தாலும் இறந்த உடலங்கள் அல்ல. ஹிட்லரின் இனவெறி அரசினால் பட்டினி போட்டும், நச்சுப் புகையடித்தும் சித்திரவதைகள் செய்யப்பட்டும், அடுக்கொல்லப்பட்டவர்களுமே. இவர்கள் செய்த ஒரே ஒரு குற்றம் ஆரிய இனத்தில் பிறக்காததே.

இந்த நிகழ்வுகளையும், இப்போது வளர்ந்துவரும் இனநிற வெறியையும் மனதில் கொள்வதோடு, இனநிற வெறிக்கு எதிரான அமைப்புகளையும் நபர்களையும் இனங்கண்டு கொள்வது இங்கு வாழும் எம்மவர் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும்.

அரசியலைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் சஞ்சீவி அரசியலை எழுதமாட்டாது என்றும், சஞ்சீவி நடுநிலையாகவே நின்று எழுத விரும்புகிறது என்றும் கூறிவந்தது. பின்னர் (30.3.1991) அக்கருத்து மாற்றப்பட்டு சஞ்சீவி என்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் சார்ந்தே எழுதும் என்ற ஒரு அடிப்படை அரசியல் பாதையினை முதலாவது கலந்துரையாடலில் முன்வைத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது யாவரும் அறிந்ததே.

அதைத் தொடர்ந்து இலங்கை அரசியலில் அரசையும், புலிகளின் பிழையான பக்கங்களையும் விமர்சிக்க சஞ்சீவி பின்நிற்கவில்லை. சஞ்சீவியானது வெறும் விமர்சனத்தோடு மட்டும் நின்றுவிடாமல் தனது கருத்துக்களை 'நோக்கு', 'கடிதத்திற்கான பதில்கள்', 'சற்றுச் சிந்தியுங்கள்' என்ற தலைப்பிலும் வெளியிடுகிறது. இது தவிர மாற்றுக்கருத்துக்களையும் எந்தவித தணிக்கையும் இல்லாது பிரசுரித்தும் வருகிறது.


புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களான P.L.O.T. E.R.O.S. E.P.R.L.F., T.E.L.O., E.P.D.P. போன்ற பச்சோந்தி இயக்கங்களைப் பற்றிய விமர்சனங்கள் சஞ்சீவியில் அதிகம் வெளிவராமல் விட்டதனால் அந்த இயக்கங்களை நாம் ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல. புலிகளின் போராட்டக் குணாம்சத்தை சற்று ஏற்றுக்கொண்ட அளவிற்கு ஏனைய இயக்கங்களை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடவேண்டியதாகும்.

புலியை எதிர்க்கிறீர்கள்..... இவர்களை விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்.... தமிழ் மக்களுக்காக யார் போராடுவார்கள்..... போன்ற பல கேள்விகளை நேரடியாகப் பல வாசகர்கள் எம்மைக் கேட்டார்கள். இன்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்

(தொடர்ச்சி பக்கம் 19)

www.tamilarangam.net

# சண் ஒரு வரலாற்றுத் தடயம்



With Chairman Mao Tse-tung in June 1967

→ 2

தீண்டாமைக்கு எதிரான பிரச்சாரமும், அதற்கு எதிரான போராட்டமும், சாதிவெறியர்களையும், நடப்பில் இருந்த அரசியலையும் எதிர்க்கும் வகையில் மாற்றுக்கலாச்சாரத்தினை முன்னெடுத்தலையால் சண்முகதாசனின் தலைமையைக் கொண்டிருந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியானது 1971ம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்காவின், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்த இலங்கை அரசால் பலத்த அடக்குமுறைக்குள்ளானது. இக்காலகட்டத்தில் சண், கே. டானியல் இருவரும் பத்து மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். 1969ம் ஆண்டில் V.A. கந்தசாமி (கரவைக் கந்தசாமி PLOT) கார்த்திகேசன் போன்றவர்கள் கிளிநொச்சிப் பகுதிக் காமங்களில் தளப்பிரதேசம் அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்நடவடிக்கைக்கு காரணமாக அமைந்தது நக்சல்பாரியில் நடைபெற்ற விவசாயிகளின் எழுச்சி மிகு போராட்டமே.

ஆனால், இந்நடவடிக்கையினை அதிதீவிர நடவடிக்கை என கட்சி கண்டித்தது. 1971ம் ஆண்டின் இலங்கை அரசின் அடக்குமுறையின் காரணமாக சண் சிறையிலும், V.A. கந்தசாமி, கார்த்திகேசன் போன்றோர் சிறிமாவின் காலடியிலும் மண்டியிட்டனர். இவர்களுடன் நோசாரியோ, ராமையா (செங்கொடிச்சங்கத் தலைவர்) போன்றவர்களும் சேர்ந்து கொண்டு சண்முகதாசனைக் கட்சியிலிருந்தும், தோட்டத் தொழிலாளர்களுக்கான விட்டுக் கொடுக்காத பல வீரம்மிக்க போராட்டங்களை நடாத்திய செங்கொடிச்சங்கத்திலிருந்தும் விலக்கிவிட்டதாவும், ஏரிக்க,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ரைப் பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டனர். சண் சிறையில் இருந்த காலப்பகுதியில் சிறைக்கு வெளியில் சண்ணுக்கு எதிராக இத்தகைய நடவடிக்கைகளை சிறிமாவுடன் கூட்டுச் சேர்ந்து நடாத்திக்கொண்டிருக்க சண் சிறைக்குள் இருந்துகொண்டே இலங்கை வரலாற்றை மார்க்சிய நோக்கில் "இலங்கை இடதுசாரிகளின் வரலாறு" என்னும் நூலை எழுதினார்.

சண் சிறையில் இருந்து விடுதலையாகி வெளியில் வந்தவுடன் ஒரு பகிரங்கக் கூட்டத்தை கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் ஏற்பாடு செய்து, அதில் "**சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!**" என இலங்கை அரசுக்கு எதிராக கண்டனக் குரல் எழுப்பினார். சிறையில் இருந்து விடுதலையாகியவுடன் இத்தகைய நடவடிக்கை மூலம் எந்தவித சமரசமற்ற நடவடிக்கை மூலமும் இலங்கை அரசையும், ஏனைய அரசியல் வாதிகளான நொஸ்கிய வாதிகளையும், இந்திய அரசின் விஸ்தரிப்பு வாத கொள்கையையும் தோலுரித்து அம்பலப்படுத்தினார். 1971ல் இலங்கைக்கு, இந்திய இராணுவத்தினரை அனுப்பி ஜே.வி.பியினரின் ஆட்சிக் கைப்பற்றல் நடவடிக்கை முயற்சியை முறியடிக்க உதவியது இந்திய அரசு என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய உறுதிமிக்க தத்துவார்த்த நடவடிக்கையில் ஊன்றி நின்றமையினால், அடுத்த தலைமுறையாக இருந்தவர்களான K.A. சுப்பிரமணியம். K. செந்திவேல், M.A.C. இக்பால், சிவராசா போன்றவர்கள் சண்முகதாஸனுடன் மீண்டும் கட்சி கட்டும் பணியில் ஈடுபட்டனர். இவர்களை வழிநடத்தியது ஒரு புரட்சிகரமான தத்துவம் என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டும்.

இதன் பயனாக கட்சி மீண்டும் தொழிற்சங்க வேலையையும், யாழ்/பகுதியின் சீர்குலைவை மீண்டும் சீரமைக்கும் நடவடிக்கைகளையும், மேற்கொள்ளவேண்டி இருந்தது. கந்நீன் பகுதியில் (மலையகத்தில்) புதிய செங்கொடிச்சங்கம் ஒன்றினை உருவாக்கியதுடன் அதன் வேலைகள் மிகதுரிதமாக நடை பெற்றது. அது போன்று வடபகுதியில் முழுநேர ஊழியராக K. செந்திவேல் வேலை செய்தார். இது தவிர **K. டானியல், S.T.N. நாகரத்தினம். K. தங்கவடிவேல், ரகுநாதன்** போன்ற தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் உறுப்பினரது ஆதரவும் **சண்** தலைமையினரின் அரசியலுக்கே ஆதரவாக இருந்தது. இதனால் மிகவிரைவில் சீர்குலைவாளர்களின் நடவடிக்கைகளை முறியடித்து கட்சியை கட்டமுடிந்தது. ஆனால் V.A. கந்தசாமி, கார்த்திகேசன், நொசாரியோ, ராமையா போன்றவர்கள் தாம் "புதிய ஜனநாயகப் புரட்சிக்கான முன்னணியில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முற்போக்காளர்களை ஆதரிப்பதன் மூலம் அணிதிரட்ட முடியும்" எனக்கூறியதாகவும், அதைச் சண் மறுத்தமை


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யால் அவரைக் கட்சியில் இருந்து வெளியேற்றியதாக தமது ஆதரவாளர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தனர்.

இந்நிலையில் யாழ் புத்தக நிலையம், V.A. கந்தசாமி சார்ந்தவர்கள் கைவசமும், தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் தலைவர்களான **கே. டனியல், S.T.N. நாகரத்தினம்** போன்றவர்கள் நா. சண்முகதாசனின் அரசியல் நிலைப்பாட்டை ஏற்றமையால் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தை உடைக்கமுடியாமல் போனது. **விஸ்வானந்ததேவர் (N.L.F.T)** V.A. கந்தசாமி, கார்திகேசன் போன்றவர்களுடன் இழுபட்டது அவரது அரசியல் தடுமாற்றம் என்றே கூற வேண்டும். விசு கற்றனில் ராமையா தோட்டத் தொழிலாளர்களது அங்கத்துவப்பணத்தில் செங்கொடிச் சங்கம் என்னும் தொழிற்சங்கத்தை நடத்த யாழ் பகுதியில் சண் முட்டிக் காசுப் போராட்டம் நடத்துவதாக பிரச்சாரம் செய்தார். (இருந்தாலும் 1983 வரை இவருக்கும் சண்ணுக்கும் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக கொள்கை ஒன்றாக இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது) அதற்கு விஸ்வானந்ததேவர் கூறிய காரணம், சண் தொழிற்சங்கப் போராட்டத்தை மட்டும் தான் முன்னெடுக்க முனைகின்றார். இதற்கு வேறொரு காரணமும் உண்டு. அதே காலகட்டத்தில் **புதிய செங்கொடிச்சங்கம்** உருப்பெற்றதும், அதன் அங்கத்தவர்கள் பெருகிவரும் சூழலில் யாழ்பகுதியில் (சாவகச்சேரி) சுப்பையா என்ற ஆசிரியர் தனது ஆசிரியர் வேலையை விட்டு, தன்னை தொழிற் சங்க வேலையில் ஈடுபடுத்திக் கொண்டார். இவ்வாறாக செங்கொடிச்சங்கம் ராமையாவின் கைமாற புதிய செங்கொடிச் சங்கத்தினை ஆரம்பித்து மீண்டும் தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவையும் மீண்டும் திரட்டினார் சண்.

தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம், புதிய செங்கொடிச் சங்கம், யாழ்பாணப் பகுதியில் கட்சி சீரமைப்பு இப்படியான வேலைகள் தீவிரப்படுத்தப் பட்டாலும், இன்னும் ஒருகுறை இருக்கவே செய்தது. அதுதான் சீனக் கம்யூனிஸ் கட்சியின் அங்கீகாரம். சீனக் கம்யூனிஸ் கட்சி சண்முகதாசனின் தலைமையை அவ்வளவாக கண்டு கொள்ளவில்லை. V.A கந்தசாமி கொஸ்டியையே அங்கீகரித்து சீனவிளம்பரப் புத்தகம், மாசே துங் சிந்தனைத்தொகுப்புக்கள் போன்றவற்றை அனுப்பிவைத்தனர். "இத்தகைய சீனக் கட்சியின் நடவடிக்கை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குள் சிந்திக்க கூடியவர்களை உருவாக்கியது." இதன் பின்பு சீனக் கட்சிக்கு சண்முகதாசனின் கட்சியின் பலத்தை காட்ட அல்லது சீனக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கீகாரம் பெறும் நோக்கில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அன்றைய சூழலில் சர்வதேச சோசலிச முகாம் இரண்டாகப் பிளவுற்ற நிலையில் (மாஸ்கோ- பீக்கிங்) சோவியத் யூனியன் திரிபு வாத நிலைப்பாடை எடுத்ததாக கண்டித்த சண் தலைமையிலான கட்சி இந்த V.A கந்தசாமியின் கட்சிச் சீர்குலைப்பால். சீனமக்கள் குடியரசின் ஆதரவையும் பெறமுடியாத நிலைக்கு கட்சியும், சண்ணும் தள்ளப்பட்டனர்.

1970களின் ஆரம்பத்தில் கம்யூனிச (பொதுவுடமைக் கொள்கை) தத்துவ எதிர்ப்பாளர்களான தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரசு கட்சி, இவர்களின் தமிழ்நாட்டு தலைவர்களால் வளிநடத்தப்பட்ட திராவிடர் கழகங்களி (தி.க, தி.மு.க)ன் பிரச்சாரம் (இந்திய துணைக் கண்டத்தின் அருகில் இலங்கை இருப்பதால், குறிப்பாக தமிழ்நாட்டு அரசியல் இலங்கையில் பாரிய தாக்கத்தை கவின்கலைத்துறையிலும், அரசியலிலும் ஏற்படுத்தியது மறுக்கப்பட முடியாது.) மிகத்தீவிரமான நிலையில், இவைகளையும் முறியடித்து கட்சியை கட்டினாலும், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக M.C சுப்பிரமணியம் சிறுபான்மைத்தமிழர் மகாசபை என்ற ஒரு ஸ்தாபனத்தை வைத்துக்கொண்டு தன் அரசியல் பிழைப்பை நடத்திக் கொண்டு தனது சகாக்களுக்குமான (மாஸ்கோசார்பு கம்யூனிஸ்டுகட்சி) அரசியலுக்கு உடந்தையாக இருந்தார்.

M.C. சுப்பிரமணியத்தின் இத்தகைய நடவடிக்கைகளை சாதிக்குச் சங்கம் வைத்திருப்பதாகவும், சாதிய அமைப்பை ஏற்ற ஒரு அமைப்பாகவும் சண்முகதாசன் முதல் கே.டானியல். S.T.N நாகரத்தினம், கே.தங்கவடிவேல், ரகுநாதன் போன்றோரும் கண்டித்தனர். கண்டித்ததுடன் நிற்காது அவரை அரசியல் ரீதியில் அம்பலப்படுத்தினர். இதன் பயனாக "மாக்சியத்தில் சாதியம் தொடர்பான விடயத்துக்கு வலிவூட்டினர். இத்தகைய விடயத்தை தனிக் கட்டுரையாக பார்ப்பதே சிறப்பானது. இருந்தும் ஒரு விடயத்தை மட்டும் கூற வேண்டும். பச்சோந்தித்தனமும், ஆன்மீக மசாலாவும், வீரமும், சபலமும் ததும்பும் மு.தளையசிங்கம், எஸ்.பொ போன்றவர்களில் இருந்து கே.டானியல் மாறுபட்டு நேர்மையும், வீரமும், துணிவும், அடிமட்ட மக்களின் வாழ்வில் அக்கறையுடன், மக்களின் அன்றாட பேச்சு வழக்கில் அவரின் எழுத்து நடை அமைவதற்கும் அவரின் அரசியல் நிலைப்பாடு நேர்மையானதாக தொடர்ந்து இருந்து வந்ததே காரணம். அரசியலில் சண்ணின் நிலைப்பாடு எத்தகையதோ. அது போன்றே இலக்கியத்தில் சொல்லப்பட வேண்டியவர் கே.டனியல் ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிரம்பல்

மரணங்கள் எப்போதோ
மலிந்தாகிவிட்டது.
உறுதியான மனத்தோடு
ஊசலாடும் உடல்களுக்கு
கேள்விகளும் — தேவைகளும்......

தலையறுந்த உடலுக்கு
உயிரேத்தி
ஊர்வலம் வந்து கொண்டிருக்கின்றது.

கேள்விகளும் தேவைகளும்
நிரம்பலாகிவிட்டது.
துப்பாக்கிகளே மூளையாகிப் போய்
உயிரிழந்த உடல்களுக்காய்.....

மனிதத்தை மதிக்கின்ற
மதிப்பின் முடிவிலியாய்
வாழ்கின்ற மனிதர்களின்
உயிர்கள் மட்டும்
கொள்முதலாகப் பறிக்கப்பட்டு
ஆலைகள் திறக்கப்பட்டன......

விரிவாகி
விற்பனை நிலையங்களும்
அதனால்
மூலவளப் பற்றாக்குறை
அதனால்
தேவைகளும் — கேள்விகளும்
அதனால்
நாளைக்கு உன் உயிரும்.......!

லோகநாதன். செ

www.tamilarangam.net

# ஃபிலார்மோனிக்கிலிருந்து பண்ணைப்புரம் வரை

● *மருத்துவன்*

திருச்சி-பெல் (BHEL) அக்கிரகாரத்தை சேர்ந்த குழுவொன்று பாலே நடன நிகழ்ச்சிக்கு சிம்பனி இசைத்துணுக்குகளை சேகரித்துத் தொகுக்க (திருட) ஒரு பாடல் பதிவுக் கூடத்திற்கு வந்தது. ஆங்கிலப் படங்களின் சிம்பனி இசை ஒலிக்கத் தொடங்கியவுடனே ஒரு பிராணி வாய் திறந்தது. ''ஆகா... என்ன இமாஜினேஷன்! (கற்பனை). என்னமோ இளையராஜா இளையராஜாங்கறாளே, அவனால இப்படி யோசிக்க முடியுமா?''

தங்களுக்குப் புதியதொரு இசை மேதை கிடைத்துவிட்டானென மகிழ்கிறது லண்டன் பிலார் மோனிகா குழு. ''உலகத்தில் சொல்ல வேண்டியதை யெல்லாம் 3000 வருடங்களுக்கு முன்பே கங்கைக் கரையிலும் காவிரிக்கரையிலும் சொல்லி முடித்துவிட்டதாக மமதை கொண்டிருக்கும் அரிசி உணவை உட்கொள்ளும் பிராணிகளோ'' (புதுமைப்பித்தன்) சங்கடத்தில் நெளிகின்றன.

இளையராஜாவின் சிம்பனி பற்றி எழுத வேண்டும்; ஆனால எழுதக்கூடாது. இதை சனாதனிகள் செய்து விட்டார்கள் எழுத வேண்டியதை எழுதாமல் இருட்டடிப்பு செய்தது மூலம்.

ராக் என்றால் என்ன? ராப் என்றால் என்ன? மைக்கேல் ஜான்சன் கொண்டு வரும் இசைக் கருவிகளின் மொத்த எடை என்ன? பாபாசெகல் வெற்றியின் ரகசியம் என்ன? - என்று கூவத்தில் முக்குளித்து முத்தெடுக்கும் பார்ப்பனப் பத்திரிக்கைகள், சிம்பனி என்றால் என்ன, இளையராஜாவின் சாதனையின் பரிமாணம் என்ன என்ற கேள்விகளை மட்டும் எழுப்பிப் பரிசீலிக்கவில்லை. இந்த மவுனத்திற்குக் காரணம் அழுக்காறு, அச்சம்.

அவாள், ஆசார, நியமங்களை மீறி கடல் கடந்தார்கள்; ஆங்கிலக்கல்வி கற்றார்கள்; குடுமியை மறைத்து டர்பன் கட்டினார்கள்; கோட்டு, சூட்டு போட்டார்கள் வெள்ளைக்காரியைக் கூத்தியாளாக வைத்து குடித்தனம் நடத்தினார்கள். எல்லாம் சரிதான். ஒரு சிம்பனி இசை அமைக்க முடியவில்லையே ஏன்? செம்மங்குடியிடமும், பாலமுரளியிடமும் 'நீங்கள் ஏன் இதுவரை சிம்பனி அமைக்கவில்லை' என்று பேட்டி எடுத்து இருக்கலாமே. 'சரிகமபதநி'க்குள் சகலமும் அடக்கம் என்கிறீர்களே சிம்பனி அதற்குள் அடங்குமா? அடங்காதா? ''சிவபெருமான் அருளிய இசையில் சிம்பனி உண்டா'' என்று ஆய்வுக் கட்டுரை எழுதியிருக்கலாமே. இவை எதையும் மேற்படி பத்திரிக்கைகள் செய்யவில்லை. தங்கள் சங்கீத கலாநிதிகளுக்கும் சிம்பனிக்கும் காததூரம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஏனென்றால் இசை இதயத்தின் மொழி; ஆன்மாவின் கவிதை. சனாதனிகளுடைய ஆன்மாவின் மொழியோ அக்கிரகாரத்தைத் தாண்டியதில்லை. இசையை மட்டுமல்ல, இந்தியச் சமூகத்தையே எந்தத் துறையிலும் வளரவிடாமல் தடுப்பது இந்த பார்ப்பன இந்துப் பாரம்பரியம்தான். இந்த உண்மையை அம்பேத்கார், துணிந்து வெளியிட்ட போது அதையும் இருட்டடிப்பு செய்தார்கள். அன்று அம்பேத்காருக்குச் செய்ததைத்தான் இன்று இளையராஜாவுக்குச் செய்கிறார்கள். அதனால் தான் உயிர் வாழும் பிணமான சங்கராச்சாரி முன்னால் மணிகணக்கில் மண்டியிட்டுக்கிடக்கும் தொலைக்காட்சி காமிரா இளையராஜாவை ஏறெடுத்தும் பார்க்க மறுக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருவேளை ''இசை முழுவதுமே சிம்பனி உட்பட தியாகப்பிரும்மத்துக்குள் அடக்கம்'' என்று இளையராஜா சரணடைந்து இருந்தால் அவாள், ஆசீர்வதித்திருக்கக் கூடும். மாறாக, ஹேய்டன், பாக், மொசார்ட், பீத்தோவன் ஆகியோரின் வரிசையில் தியாகய்யரையும் சேர்த்தார் இளையராஜா. அப்படிச் சேர்த்தது அவர்களுக்குப் பொறுக்கவில்லை. (தியாகய்யரைப் போய் அம்மேதைகளுடன் சேர்த்தது நமக்கும்தான் பொறுக்கவில்லை)

அவர்களைப் பொறுத்தவரை 'கர்நாடக இசையென்னும் மந்திரச் சிமிழுக்குள், உலகமே அடக்கம்', 'சரஸ்வதி மஹாலின் சமஸ்கிருத ஓலைச்சுவடியைத் திருடிச் சென்றுதான் வெள்ளைக்காரனே ராக்கெட் விட்டான்'

சங்கராபரணம், தில்லானா மோகனாம்பாள் என்று டஜன் கணக்கில் படமெடுத்து, அவற்றில் இரண்டு மேற்கத்திய இசைத் துணுக்குகளை இசைத்துக் காட்டி எல்லாம் எமக்குள் அடக்கமென்று அற்பத்தனமாகப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். அல்லது மேற்கத்திய இசையை விபசாரத்திற்கு இணையாக வைத்து கொச்சைப் படுத்தினார்கள். இதையெல்லாம் நடுவீதியில் போட்டு உடைத்தரர் இளையராஜா. அந்த ஆத்திரம்தான் இந்த மகா மவுனத்திற்கு காரணம்.

மக்கள் எல்லா அறிவையும் பெற உரிமை படைத்தவர்கள்; இசைத் துறையிலும் மக்களின் பாமரத்தனத்தை அகற்ற வேண்டும். அதைச் செய்யாமல் மக்களின் அறியாமை குறித்து வருந்திப் பயனில்லை. ஆனால் மெல்ல மெல்ல அறிவொளி பெறத் தொடங்கும் மக்களை முட்டாள்களாகவே வைத்திருப்பது எப்படி என்று கவலைப்படுகிறார்கள் சனாதனிகள். இல்லையென்றால் பார்ப்பனர் களிலேயே நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேருக்கு பரிச்சயமில்லாத கர்நாடக இசையைப் பற்றி பக்கம் பக்கமாக விமர்மனம் எழுதுபவர்கள் சிம்பனியை அறிமுகப்படுத்தி ஏன் எழுதக் கூடாது?

சிம்பனி இசை வடிவம் ஐரோப்பிய பாரம்பரியம். 200 ஆண்டு பாரம்பரியம் இருந்தும் இந்த இசையை ரசிக்கத் தெரிந்தவர்கள் அங்கேயே குறைவு. இசை அமைக்கத் தெரிந்தவர்களோ வெகுகுறைவு. இது ஆசியர்களுக்கு, இந்தியருக்கு, தமிழருக்கு வெகுதூரம்; தாழ்த்தப்பட்டவர்களுக்கோ வெகு வெகு தூரம்.

உலகளவில் விஞ்ஞானிகளோ, ஓவியர்களோ, திரைப்பட இயக்குநர்களோ தத்தம் துறை பற்றி ஒன்றாகக் கூடி விவாதித்து விட முடியும்; ஆனால், இசைத்துறை அப்படியல்ல. இசை விவரணைக்கு அடங்காதது. உணர்ச்சிச் செறிவானது வேறு எந்த வடிவத்திலும் சொல்ல முடியாததை இசை சொல்கிறது. மங்கலான மேக வலைப் பின்னல்களாக நம்மைச் சுற்றிக் கவியும் இசை மாயத் தோற்றமல்ல; உண்மை. சுலபமாக உணர்ந்து மற்றவர்க்கும் எடுத்துச் சொல்ல இசை கணிதமல்ல. விஞ்ஞானங்களில் ஆகத் துல்லியமானது கணிதம்; கலைகளில் ஆக சூக்குமமானது இசை.

மார்க்சிய இசையறிஞர் ஐஸ்லர் சொல்வது போல ஐன்ஸ்டினின் ''ஆற்றல் பற்றிய விதி''யைக்கூட ஜனரஞ்சமாக விளக்கிவிடலாம். ஆனால் பீத்தோவனின் ஆக்கத்தை அவ்வாறு எளிதாக விளக்கிவிட முடியாது.

இத்தகையதொரு துறையில்தான் இளையராஜா சாதனை படைத்திருக்கிறார்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாக், மொசார்ட், பீத்தோவனை ரசிக்கத் தெரிந்தவர்களெல்லாம் புதிதாக சிம்பனியைப் படைத்துவிட முடியாது. அதற்குப் பயிற்சியும், ஆற்றலும் மட்டுமல்ல, மன எழுச்சியும் வேண்டும். அது கர்நாடக இசை 'மேதை'களிடம் கிடையாது. செக்குமாடுகள் மான்களாக முடியாது. கர்நாடக இசையில் செய்வதாகச் சொல்லி கொள்ளப்படும் புதுமுயற்சிகள் கூட வெறும் கழைக்கூத்துகளே.

இன்னொருபுறம் அவர் பாவலருடன் இசைக் குழுவிலிருந்தார், இசையுடனேயே வளர்ந்தார். இன்று சிம்பனி அமைத்துவிட்டார் என்று கூறுவது பாமரத்தனமானதும் அவரது கடும் முயற்சியைக் குறைத்து மதிப்பிடுவதுமாகும்.

இசைபற்றிய நமது அறிவை, ரசனையை விரிவாக்கிக் கொள்ளும் போதுதான் நமக்கு மறுக்கப்பட்ட அறிவின் பரிமாணம் புரியும். இல்லையேல் நாளை ராஜாவின் சிம்பனி வெளிவந்து அதை உலகமே ரசிக்கும் போது நாம் ரசிக்க முடியாது. நம்மூர் ஆள் போட்ட சிம்பனியை நம் காதிலேயே நுழையவிடாமல் இசை மடமை நம் காதை அடைத்துக் கொண்டிருக்கும்.

திரை இசை இல்லாமல் தனியானதொரு மேதமையிலிருந்து ஊற்றெடுத்து சிம்பனி வந்து விடவில்லை. இதை இளையராஜாவே கூறுகிறார். நமக்குத் தெரிந்த இளையராஜா சினிமா இசை அமைப்பாளர் தான். பல படங்களில் அவரது பின்னணி இசையைக் கேட்கும்போது காட்சியைப் பார்க்காமல் கண்ணை மூடிக் கொள்ளத் தோன்றுகிறது. பாடல் இசை அமைப்புக்களைக் கேட்கும்போது அந்தப்படத்தைப் பார்த்துவிடக்கூடாது என்ற உணர்வேற்படுகிறது. ஒரு சில இயக்குனர்களின் படங்களைத்தவிர மற்ற எல்லாவற்றுக்கும் இது பொருந்தும். அவரது இசை பிரும்மாண்டமான வண்ண ஓவியமாக விரிகிறது என்றால் திரைப்படத்தின் காட்சிகள் பொங்கல் வாழ்த்து அட்டைகளை நினைவுபடுத்துகின்றன. இந்தக் கணிப்பில் ஒருவேளை சில பிழைகள் இருக்கலாம்; ஆனால் பொதுவில் இதுவே உண்மை.

அப்படி அவர் இசையில் என்னதான் இருக்கிறது? 'வீட்டுக்கு வீடு வாசப்படி வேணும், தெருககூத்துக்கும் பாட்டுக்கும் தாளகதி வேணும்?' - இயற்கையில் தாள கதி இருக்கிறது; மனித உடலின் உள் இயக்கத்தில் இருக்கிறது; மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவில் இருக்கிறது. மனித உணர்ச்சிகளுடன் ஒட்டிப்பிறந்தும் அதன் ஒரு வெளிப்பாடும் தாளம். 'காட்டுவழி போற புள்ளே கவலைப்படாதே' போன்ற ராஜாவின் பழைய பாடல்களிலும், 'பண்ணைப்புற ராசாவே, கட்டின மெட்டிது லேசா', 'நட்டுவச்ச ரோசாச்செடி ஆமா, ஆமா' போன்ற சமீபத்திய பாடல்களிலும் விதவிதமான தாளகதிகள் வருகின்றன. பறையின் தாளஒலியைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, இமைக்கும் நேரத்தில் ஆப்பிரிக்கப்பழங்குடி மக்களின் ஆட்டம் தாளகதியாகக் காதில் பாய்கிறது. வெகு இயல்பாக ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தாவிச் செல்கிறது.

ஆனால், செவ்வியல் (CLASSICAL) இசை உயர்ந்தது, நாட்டுப்புற இசை தாழ்ந்தது என்ற திமிர்த்தனம் கொண்ட சனாதனிகள் இந்த 'அநீதி' கண்டு கொதிக்கிறார்கள். 'குனித்த புருவமும்' வேகம் குறைந்த கதியில் தொடங்கி, 'ராக்கம்மா கையத்தட்டு' என்ற வரிகளின்போது துரிதகதியில் 'டப்பாங்குத்து' தாளத்துக்கு தேவாரத்தை இழுத்துச் சென்றிருப்பதை அவர்களால் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்? காட்சியில் தேவாரத்திடம் டப்பாங்குத்து மனதைப் பறிகொடுப்பது வேறு விஷயம்.

ஆம்! மேட்டுக்குடி வர்க்க வாழ்க்கை இயக்கத்தின் கதி யும், உழைக்கும் மக்களின் வாழ்க்கை இயக்கத்தின் கதியும் வேறு. இயக்குனர் பாலசந்தர் சொல்தைக் கேட்டுக் கொண்டு, தியாகய்யரின் கீர்த்தனைகளை தமிழாக்கி சேரிக்கு சேரி ஒலிபரப்பினாலும் சத்தம்தான் சேரிக்கு சேருமேயொழிய சரக்கு சேரிக்கு சேரவே சேராது.

உட்கார்ந்து தின்பவனின் நிதானம் உழைப்பவர்கள் வாழ்க்கையில் இருக்காது. அவர்களது இசையின் தாளத்திலும் இருக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காது. ஒன்று மற்றொன்றுக்கு உறுத்தத்தான் செய்யும். அதேபோல, மேற்கத்திய 'ராக்' போன்ற இசை வடிவங்களின் வெறி கொண்ட தாளம் ஏகாதிபத்தியத்தின் வெறித்தனம் மற்றும் அராஜகத்தின் வெளிப்பாடுதான். நமக்குப் பழக்கமான, நமது வாழ்க்கைக்கு நெருக்கமான தாளகதியில் காலூன்ற வைத்து இசை உலகத்தை நமக்குச் சுற்றிக்காட்டுகிறார் ராஜா. தற்போது அமைத்துள்ள சிம்பனி பற்றி கருத்து கூறும்போது மைக்கேல் டவுன் எண்ட (இவர் ராஜாவின் சிம்பனிப் பதிவு இயக்குனர்) அவற்றில் இளையராஜா பயன்படுத்தியுள்ள தாள வகைகளையே குறிப்பிட்டுச் சொல்லுகின்றார்.

அப்படியானால், தாளம்தான், அவரது தொழில் ரகசியமா? 'அன்னக்கிளி' வந்தபோது அப்படித்தான் பலர் சொன்னார்கள். ''இது தவுல் கம்பெனி, ரொம்பநாள் நிக்காது'' என்றார்கள். தமிழ்த்திரை இசைக்கு வடக்கே இருந்து ஷெனாய் வந்தது; ஐரோப்பாவிலிருந்து பியானோ, அக்கார்டியன் வந்தது. ஆப்பிரிக்காவிலிருந்து டிரம்ஸ் வந்தது; ஆனால் உள்ளூர் (மன்னிக்கவும் ஊர் அல்ல சேரி) தப்பும் பம்பையும் உறுமியும் மட்டும் வரவில்லை. அதற்கு 'உரியவர்'தான் அவற்றை எடுத்து வந்து தமிழகத்தை ஆக்கிரமித்திருந்த இந்தி மயக்கம் என்னும் பேயை விரட்டினார். இதற்கு முன்னாலும் திருவிழாவில் தலைகாட்டுவதுபோல அந்த இசைக்கருவிகள் தமிழ்ச்சினிமாவிலும் தலைகாட்டியிருக்கலாம். ஆனால் அந்தத்தவில் வேறு. இந்த மேளம் வேறு. அந்த நாதஸ்வரம் வேறு. இந்த நாயனம் வேறு; இரண்டுக்கும் கொடுக்கப்பட்ட மரியாதைகளும் வேறு வேறுதான்.

பலர் விரும்பியதைப்போல அவர் வெறும் 'தவுல் கம்பெனி'யாக மட்டும் இருந்திருந்தால் 750 படங்களுக்கு இசை அமைத்திருக்க முடியாது. 'அன்னக்கிளி'க்கு முன்பு ஜி.கே.வெங்கடேஷ் குழுவில் இசைக்கலைஞனாகப் பணியாற்றிய போதே பல இசைத் துணுக்குகளை எழுதி சக கலைஞர்களுடன் சோதனை செய்து பார்த்திருக்கிறார்.

இளம் இசையமைப்பாளர் இசைவாணன் கூறுவதைப்போல ''அன்னக்கிளி முதல் வள்ளி வரை அவர் அள்ளி வழங்கியிருப்பவை விதவிதமான ஹார்மனி நெசவுகள். நாட்டுப்புற இசையோடு ஹார்மனியை இணைத்து நெய்து கொடுத்திருப்பது அன்னக்கிளியின் சிறப்பம்சம். முதல் படத்தில் அடிவைக்கும்போதே 'அடாஜியோ' என்ற குறைந்த வேகத்திலமைந்த 'அன்னக்கிளி உன்னைத் தேடுது' என்ற சோகப் பாடலை முயற்சித்தது அவரது துணிச்சலான செயல்''

துணிச்சலுக்குக் காரணம் புதிய முறைகளை சோதனை செய்து பார்ப்பதில் அவருக்கிருந்த ஆர்வம், தன்னம்பிக்கை. 'இளமை எனும் பூங்காற்று பாடியது ஓர் பாட்டு' என்ற பாடலில் திரையில் பிளாஷ் பேக்கில் கதை காட்சிகளாக நகர்ந்து செல்லும்போது அதன் பின்புலத்தில் ஓவர்ச்சர் என்னும் (ஒபரா இசை நாடக முன்னுரைப் பாணி சிம்பனிக்கு முன்னோடியானதொரு வடிவம்) இசை நகர்ந்து செல்லும்.

'நிழல்கள்' படத்தில் இந்திய இசை முறைகளை கையாண்டும், 'மூடுபனி'யில் ஏற்கனவே புழக்கத்திலுள்ள ராகங்களுக்குப் பதிலாக காட்சியின் தேவைக்கேற்ப புதிதாக 'இசைக்கரு'க்களை (Theme) உருவாக்கியும் காட்டினார். 'ராஜபார்வை'யில் இந்திய, மேற்கத்திய தாளகதிகளையும், ஹார்மனி யையும் சோதனைக் களன்களாக்கினார்.

நெசவில் டெக்ஸ்சர்—இழைநயம் என்று கூறுவார்களே, அதை இசையில் காட்டுகிறது 'பூமாலையே தோள் சேரவா' என்ற பாடல். இப்பாடலில் பண்மிசைப்பண்ணாக, ஒன்றின் மீது இன்னொரு பண் உராய்வின்றி மிதந்து செல்லும் அழகைக் காணலாம். ராஜா பெரிதும் போற்றும் இசை மேதை பாக்-கை 'பண்மிசைப் பண்ணின் (Counter Point) தந்தை' என்பார்கள். தந்தைக்கேற்ற தனயன்.

பரிச்சயமற்ற சொற்றொடர்களால ராஜாவின் இசையை விளக்கிக் கொண்டிருப்பது ஏன் என்று வாசகர்கள் வியக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாம். இவை இசையின் நவீன வடிவங்கள். ஆழமானமுறைகள்.

மனோடனி என்பது இசையின் புராதன வடிவம். கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை ஆகியவை இந்த ரகம்தான். ஸ,ரி, க,ம,ப,நி என்ற ஏழு சுரங்களில் கர்நாடக இசையில் ஒரு தருணத்தில் ஒன்று மட்டுமே ஒலிக்கும். ஒன்றுக்கொன்று இணையாகவோ, ஒன்றின் மீது ஒன்று தவழ்ந்தோ இந்தச் சுரங்கள் வராது. ஒன்றையொன்று பின் தொடர மட்டுமே செய்யும். இந்த இசையை நீண்ட நேரம் கேட்கும்போது அலுப்பு ஏற்படக் காரணம் இதுதான். 'மனோடனஸ்' என்ற ஆங்கில சொல்லுக்கு 'சலிப்பூட்டுவது' என்பதுதானே பொருள்!

மோனோடோனுக்குப்பின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்கள் ஒரே நேரத்தில் இசைக்கப்படும் பாலிபோனி (Polyphony) பிறந்தது.

ஹார்மனி, இவையிரண்டிலிருந்தும் வேறுபட்டது. ஒரு பண், சுர இயைபுகளோடும் (Chords) வேறு உதிரி ஒலிகளுடனும், (இசைக்கருவிகளுடனும்) இசைய நெய்யப்படுவதே ஹார்மனி. தற்போது ராஜா அமைத்துள்ள சிம்பனியில் 80-க்கும் மேற்பட்ட இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்கிறார்கள்.

நாம் பெருமிதம் கொள்வது கருவிகளின் எண்ணிக்கையினால் அல்ல; அவை பயன்படுத்தப்பட்டுள்ள - சிம்பனி - இசை வடிவம் காரணமாகத்தான்.

மேலும் 10 இசைக் கருவிகளைக் கூட்டி 90 ஆக்கி 'நம்மூர்' கர்நாடக சங்கீத வித்வானின் கையில் கொடுத்தால் என்ன நடக்கும்? மதுரை சோமு கச்சேரியை எட்டால் பெருக்கினால் என்ன விடை கிடைக்குமோ அதுதான் கிடைக்கும். 'எந்தரோ மகானுபாவுலு' என்று செம்மங்குடி முதல் குரல் கொடுத்தால் 90 கருவிகளும் பள்ளிக்கூட கடவுள் வாழ்த்து போல அதையே திரும்பச் சொல்லும். அவ்வளவுதான். அதாவது, 'அறுக்கமாட்டாதவன் இடுப்பில் 58 கருக்கரிவாள்'.

கர்நாடக இசையைக் கேவலப்படுத்துவதற்காக இதைச் சொல்லவில்லை; (இனி மேல் நாம் வந்து கேவலப்படுத்த அதில் ஏதும் மிச்சமில்லை என்பது வேறு விவகாரம்) அதன் வரம்பு அவ்வளவுதான்.

கர்நாடக இசையில் பாடகன்தான் (அல்லது முக்கிய கருவி) சர்வாதிகாரி. மற்றவை பக்க வாத்தியங்கள் மட்டுமே. அவற்றுக்கு 'தனி உரிமைகள்' கிடையாது. ஆனால் ஹார்மனி ததும்பும் சிம்பனியில் எத்தனை கருவிகள் உண்டோ அத்தனைக்கும் தனிப்பங்கும் பாத்திரமும் உண்டு. அதனால்தான் சிம்பனி இசைப்பதிவு முடிந்த பின் அதில் பங்கேற்ற ஒரு கலைஞர் தனது கருவிக்கு வாய்ப்பு கொடுத்ததற்காக ராஜாவிடம் நெகிழ்ச்சியுடன் நன்றி சொல்லிருக்கிறார். பக்கவாத்தியக்காரரை முக்கியப் பாடகர் கச்சேரியினூடாகவே கவிழ்ப்பதும், மிரட்டுவதுமே கர்நாடக இசை மரபு.

பத்து வண்ணங்களில் பட்டு நூலைக் கட்டுக்கட்டாகக் கொண்டுவந்து கொடுத்தால் கர்நாடக இசை அதை தாம்புக்கயிறாக்கும்; நூல் மிச்சமிருந்தால் இன்னும் தடியாக முறுக்கித் தேர்வடமாக்கும்.

ஆனால் சிம்பனியோ அதைத் தறியில் கொடுத்து நெஞ்சை அள்ளும் வண்ணத்தில் புடவையாக நெய்து காட்டும். பார்டராக, குறுக்குக் கோடுகளாக, புட்டாக்களாக, அள்ளி இரைக்கப்பட்ட புள்ளிகளாக... ஒவ்வொரு வண்ணமும் ஒரு தினுசு (Design) காட்டும். இந்தத் திணுசுகள்தான் சிம்பனியின் கருக்கள் (Theme). மொத்தப் புடவையும் தோற்றுவிக்கும் அழகியல் உணர்வுதான் ஒரு குறிப்பிட்ட சிம்பனி சொல்லும் செய்தி.

கர்நாடக இசையில் பாடகன் எஞ்சின்; பக்கவாத்தியங்கள் அவன்பின்னே பிணைக்கப்பட்ட பெட்டிகள். சிம்பனியின் செய்தி என்பது சாலை விதி. அதை மீறாமல் சீறியும், பறந்தும், கனங்கியும், நிதானமாகவும் செல்லும் பலவகை வாகனங்கள்தான் சிம்பனியின் உட்கூறுகளான இசைக்கருவிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்போது ராஜாவின் 'நட்டுவச்ச ரோசாச்செடி' 'பூமாலையே' போன்ற பல பாடல்களை மீண்டும் கேட்டுப் பாருங்கள். நெஞ்சை அள்ளும் விதவிதமான வண்ணாங்கள் உங்கள் மனக்கண்ணில் விரியும்.

இந்த 'வித்தை' நமது சங்கீத மும்மூர்த்திகளில் முதல்வரான தியாகய்யருக்குப் பிடிபடாமல் 'எவனோ ஒரு' பீத்தோவனுக்கும் மொசார்ட்டுக்கும் கைவந்தது எப்படி? சிம்பனி திருவையாற்று காவிரிக்கரையில் அவதரிக்காமல் வியன்னாவில் பிறந்தது ஏன்? சங்கீத சிரோன்மணிகளைக் குடையும் கேள்வி இது.

ஏனென்றால் இரண்டு காதும் கேட்காத பீத்தோவன் ஐரோப்பாவின் உள்ளக் குமுறலை தன் இதயத்தால் கேட்டார்; தியாகய்யரின் காதில் காலை நேர கோயில்மணி சத்தமும், மதியத்து ஒற்றைக்காக்கை அழைப்பும், இரவில் காவிரிக்கரை தவளைகளின் இரைச்சலுமே விழுந்தது.

எழுச்சிபெறும் தொழிலாளி வர்க்கத்திற்கே எதிர்காலம் என்று முன்னறிந்த பீத்தோவன் 'தொழிலாளர் படையே வருக' என்று தனது 9-வது சிம்பனியையே அதற்கு வரவேற்பிசையாக்கினார். 'எச்சரிக்ககா ரா... ரா... ஹே ராமச்சந்திரா' (பார்த்து வாப்பா ராமா) என்று மோட்டுவளையைப் பார்த்துக் கதறிக் கொண்டிருந்தார், தியாகய்யர்.

முடியரசர்களின் தலையை அப்புறப்படுத்திவிட்டு, குடியரசு அமைக்கும் பாதையில் ஐரோப்பா நடைபோட்டுக் கொண்டிருந்தது; மணிமுடியை பிரிட்டிஷ்காரனிடம் போக்கியத்துக்கு விட்டுவிட்டு, அவனுடைய எச்சில் காசில் வாழ்ந்த 'சரபோஜி'க்கள் தாங்களும் மகாராஜாக்கள் என்று இங்கே கம்பீரமாக நடமாடிக் கொண்டிருந்தனர் (சரபோஜி—தியாகய்யர் காலத்து தஞ்சை மன்னன்)

பீத்தோவனின் மூளையில் மின்னலாக வெட்டி பின்னர் பற்றிக் கொண்ட தீப்பிழம்பல்ல சிம்பனி; மொசார்ட்டுக்கு கர்த்தர் அதை அருளிச் செய்யவுமில்லை. மன்னனுக்கும் மக்களுக்கும் அன்று நடந்த யுத்தத்தில் அவர்கள் மக்கள் பக்கம் நின்றார்கள்;





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகத்துக்காகக் குரல் கொடுத்த ஃப்ரீ மேசோனியச் சிந்தனைகளை ஆதரிக்கிறார்கள்; அதைப் பிரகடனமும் செய்தார்கள்.

''சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்; இயற்கை - பகுத்தறிவு - பேரறிவு'' என்ற தங்கள் நம்பிக்கையை இசையில் வடித்தார்கள். 'அடிமைத்தனம் - வருணதருமம் - இந்துராஷ்டிரம்; பிரம்மம் - பரப்பிரம்மம் - அத்வைதம்'' என்று நாடகமாடியவர்களிடமிருந்தும், ஆடிக் கொண்டிருப்பவர்களின் இதயத்திலிருந்தும் சிம்பனி ஊற்றெடுக்க முடியாது. எந்த 'பெரியவாளும்' இதற்கு ஆசீர்வதிக்கவும் முடியாது.

இதுதான் காரணம்: இதுவே உண்மை. 'வேதகணிதம்' பற்றிப் பிதற்றிக் கொண்டிருக்கும் இந்துராஷ்டிர பயித்தியங்கள் 'வேதகாலத்திலேயே சிம்பனி இருந்திருக்க வேண்டும்'' என்று எங்கோயாவதொரு மூலையில் ஓலைச்சுவடிகளைக் கிளறிக் கொண்டிருக்கும் அபாயம் உண்டு.

இத்தகைய பயித்தியங்கள் கர்நாடக இசைக்கு முட்டுக்கொடுப்பதற்காகவே எடுக்கப்பட்ட 'சிந்துபைரவி' படத்தை இன்னொரு முறை தரிசித்தால் பித்து தெளியக்கூடும்.

# ஹேய்டன் - மோசார்ட் - பீத்தோவன்

மத்தியகால ஐரோப்பிய இசை மரபில் வடிவ - உள்ளடக்கங்களில் மிகப்பெரிய மாற்றத்தையும், வீச்சையும் கொண்டு வந்தவர்கள் வியன்னா இசைக்கலைஞர்கள். அவர்களில் ஹேய்டன், மோசார்ட், பீத்தோவன் முக்கியமானவர்கள்.

இவர்கள் சோனடா, சிம்பனி வடிவங்களில் மாபெரும் சித்திரங்களைத் தீட்டினார்கள். சோனடா வடிவம் மூன்று அல்லது நான்கு இசையோட்டங்கள் கொண்டவை. முதல் ஓட்டம் எக்ஸ்போசிஷன் - அறிமுகம்; இரண்டாவது - டெவலப்மெண்ட் - வளர்ச்சி; முதல் பகுதி கருக்கள் இரண்டாவது பகுதி வழியாக வளர்ந்து மூன்றாவது பகுதியான ரீகேபிச்சுலேசன் என்ற நினைவு கூறுதலில் புத்தம் புதிதாக மாறுகிறது. சிம்பனி வடிவம் சோனடா போன்றதே — ஆனால் விரிவாக, பல இசைக்கருவிகளுக்காக எழுதப்படுவது. மேலே சோனடாவில் சொன்ன முதல் இரண்டு இசையோட்டங்களோடு, மூன்றாவதாக லேசான பாணியில் மினுவெட் - ஸ்செர்சோ பகுதியும், நான்காவதாக முரண்பாடுகள் தீர்க்கப்படும் ஃபைனேல் என்ற முடிவுரைப் பகுதியும் சேர்ந்ததே சிம்பனியாகும்.

சர்ச் இசை மரபை முதலில் உடைத்து முதலடி வைத்து வழிகாட்டியவர் ஹேய்டன்; தனது 6-வது வயதில், இசைக்கத் தொடங்கி, 35 ஆண்டு வாழ்க்கையில் மகிழ்ச்சி, எழில், உருகும் சோகம், வெற்றி - வீரம் - பேரறிவு என்று விதவிதமான உணர்ச்சிகளை அள்ளித் தந்து வரலாறு படைத்தவர் மோசார்ட்; சமூகப்புயலின் இடையே பிறப்பெடுத்த இசைப்புயல் பீத்தோவன் - நெப்போலியனை வரவேற்று காணிக்கை செலுத்தி 'எராய்கா' (EROCA - வீரஎழுச்சி) என்ற மூன்றாம் சிம்பனி படைத்தார். ஆனால் பேரரசனாக அவன் முடிசூட்டிக் கொண்டதும், 'மனிதகுல எதிரிக்கு நான் எதிரி' என்று கூறி பீத்தோவன் அந்த காணிக்கையைக் கிழித்தெறிந்தார்; சமூகம் முன்னேறும் இயங்கியலை அவர் தனது 9-வது சிம்பனியில் கொண்டு வந்தார்; ஷில்லரின் 'மகிழ்ச்சிக்கொரு பாட்டு' என்ற பாடலுக்கு சிம்பனி எழுதி அதில் கருவிகளோடு, மனித கூட்டுக் குரலையும் இணைத்ததன் மூலம் எதிர்காலம் பாட்டாளிகளுக்கானது என்ற செய்தியை இசையால் அறிவித்தார் பீத்தோவன்.

மூவரின் பங்களிப்புகளையும் நாம் என்றும் நன்றியோடு நினைவு கூற வேண்டும்.



(தொடர்ச்சி பக்கம்: 20)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(6 வது பக்கத் தொடர்ச்சி)

இது போன்ற பல கேள்விகள் பலபேர் மத்தியில் இன்றும் எழுந்துகொண்டிருக்கிறது. இப்படியான கேள்விகள் சம்பந்தமாகவும், இப்போராட்டச் சூழ்நிலை மாற்றப்பட வேண்டும் என்பதாலும் இன்று புலம்பெயர்ந்த நாடுகள் பலவற்றில் இதுசம்பந்தமான விவாதங்களும் கலந்துரையாடல்களும் ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்விவாதங்கள் - கலந்துரையாடல்களின் வளர்ச்சிக்கட்டம் தான் மூன்றாவது பாதை. இந்த மூன்றாவது பாதைக்கான வேலைத்திட்டம் ஒன்றை மே 24 ல் பிரசுரித்திருந்தோம். இந் நடவடிக்கையானது சந்ததியை எந்த ஒரு கட்டத்துக்குள் அடைக்கலாம் என்றிருந்தவர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்ததை விட வேறொரு விடயத்தை நாம் முன்வைத்ததால் முதலில் அதிர்ச்சியும் அதிலிருந்து, அக்கருத்தை உள்வாங்கிக்கொள்வதில் மறுப்புநிலையுமே அவர்களிடம் உருவாகின்றது.

புலி எதிர்ப்பாளர்கள் மத்தியில் புலியை எதிர்க்கவேண்டும் என்பதற்காக எதிர்ப்பவர்களும், புலியை ஆதரித்துக்கொண்டு பின்கதவால் எதிர்ப்பவர்களும், கோட்பாடு ரீதியாக எதிர்ப்பவர்களும் உள்ளனர்.

புலி ஆதரவாளர்கள் மத்தியில் எங்கள் மண்ணைக் காக்கும் மைந்தர்கள் இவர்கள் தான் என நினைப்பவர்களும், வேறு இயக்கங்களால் பாதிக்கப்பட்டவர்களும், ஏதோ ஒரு வகையில் குடும்ப அங்கத்தவர்கள் அமைப்பில் இருப்பதாலும், ஏதோ ஒன்றுக்குச் செய்யவேண்டும் இப்பொழுதும் நாட்டில் அவர்கள் தானே நிற்கின்றார்கள், ஆகவே அவர்களை ஆதரிப்போம் என ஆதரிப்பவர்களும், மற்றும் அடங்குவர்.

இந்நிலையில் சந்ததியின் பிரசுரமான இந்த மூன்றாவது பாதைக்கான திட்டம் எங்கள் அரசியல் நிலைப்பாட்டை எல்லோருக்கும் தெளிவாக உணர்த்த வாய்ப்பு அளித்திருக்குமென நம்புகின்றோம்.

நாங்கள், இலங்கை அரசு, அரசசார்புக் குழுக்கள், புலிகள் ஆகிய முதலாவது, இரண்டாவது நிலையில் உள்ள அரசியல் நிலைப்பாட்டை எதிர்க்கிறோம். எனவே மூன்றாவது பாதை ஒன்றை சந்ததியானது முன்மொழிய வேண்டும். ஒரு போராட்டத்தில் என்ன மாதிரி நவீனஆயுதங்கள் முக்கியமோ அதேபோல வேலைத்திட்டங்களும் முக்கியமானது. அப்படியான ஒரு அரசியல்ரீதியான திட்டத்தை சந்ததி முன்மொழியாதுவிட்டால் நாம் ஏற்கனவே கூறிய, " அனைத்து ஒடுக்கப்பட்ட மக்கள் பக்கம்நின்று குரல்கொடுப்போம்" என்ற கருத்துக்கு நேர்-




தொடர்ச்சி பக். 50

www.tamilarangam.net

'மகா கணபதிம்' என்று சிவகுமார் கச்சேரியை துவங்கியவுடன் காமெராமேன் காமெராவைத் தூக்கிக் கொண்டு காட்டுக்கு ஓடுகிறார்; தொலைக்காட்சியாக இருந்தால் பாடகரின் முகத்தையே ஒரு மணிநேரம் காட்டிக் கொண்டிருக்கலாம். இது சினிமா வாயிற்றே. காமெரா கடல், மலை, ஆறு, பிள்ளையார் கோயில் மீண்டும் ஆறு, மலை, கடல், பிள்ளையார் கோயில் என்று திரும்ப திரும்ப காட்சிப் படிமங்களைத் தேடி அலைந்து சோர்ந்து கடைசியில் பாடகர் காலிலேயே வந்து விழுகிறது. காரணம் என்ன? இகலோகத்து மாந்தர்களுக்கும் இந்த இசை - கீர்த்தனைக்கும் எள்ளளவும் சம்பந்தம் கிடையாது.

மன்னர்கள், பிரபுக்களின் ஒற்றை ஆணைக்குரலை மீறி பல்வேறு மக்கட் பிரிவினரின் குரலும் ஒலிக்கத் தொடங்கியதன் சமூக விளைவு; புரட்சி - ஜனநாயகம், மோனோடோனின் கையிலிருந்த சவுக்கைப் பிடுங்கி எறிந்ததன் மூலம் புரட்சியானது இசைத்துறையில் ஹார்மனியாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. சமூகத்தைப் போலவே இசையும் அடுத்த நிலைக்கு முன்னேறியது.

இப்படி 18-ம் நூற்றாண்டில் நிகழ்ந்த, இசைத்துறை முன்னேற்றம் தான் ஹார்மனி. இதன் முக்கிய அங்கமான சுருதிக்கும் ஸ்தாயிக்குமுக்குள்ள உறவை தேவதூதன் பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்னரே ஆராய்ந்தான் பித்தகோரஸ். (செங்கோண முக்கோணத் தேற்றம் பிதாகரஸ்தான்) வெவ்வேறு அளவில், கம்பிகளை இழுத்துக் கட்டி ஸ்வர வரிசையை எழுப்பினான். செவியால் உணரக்கூடிய ஒலியை கணிதத்தால் அளந்தான். இசையே கணிதம் என்றான்; அவன் ஒரு தத்துவஞானி. எனவே ஒரு படி மேலே போய் 'எல்லாம் கணிதமே' என்றான். ஏறத்தாழ அதே காலகட்டத்தில் நம் 'பாரத தத்துவஞானி' கிருஷ்ண பரமாத்மா 'எல்லாம் நானே' என்று அர்ச்சுனன் தலையில் மிளகாய் அரைத்துக் கொண்டிருந்தான்.

2500 ஆண்டுகளுக்கு முன் தன் புருவத்தை நெரித்து உலகை ஆராய்ந்து அறிவித்த அந்த மேதையின் வீரம் நம்மை சிலிர்க்கச் செய்கிறது. ஆம்! அறிவியல் துறைகளிலேயே துல்லியமான கணிதம் பேரண்டத்தின் புற உலகின் இயக்கத்தை புரிந்து கொள்ள முயல்கிறது; கலைத்துறை அனைத்திலும் சூக்குமமான இசை, மன உலகின் உணர்வுகளை புரிந்து கொள்ள முற்படுகிறது.

இசையில் கணிதம் உண்டு; ஆனால் இசையே கணிதமல்ல. தாளகதியும் ஸ்வரமும், ஸ்தாயியும் கணிதத்தால் கட்டுப்படுத்தப்படுபவை. இசையைத் தூண்டும் மன உணர்வுகளும், இசையால் தூண்டப்படும் மன உணர்வுகளும் கணிதத்திற்குக் கட்டுப்படாதவை. இதை 2500 ஆண்டுகளுக்கு முன் பித்தகோரஸ் சிந்தித்திருக்க முடியாது.

"என்ன பெரிய இளையராஜா? பீத்தோவன் காலத்தில் கம்ப்யூட்டர் கிடையாது; இளையராஜா கையில் கம்ப்யூட்டர் இருக்கிறது. சிம்பனி அமைப்பதில் என்ன கஷ்டம்?" என்று சில மேதாவிகள் தங்கள் அறிவியல் ஞானத்தை காட்டுகிறார்கள். 'அமெரிக்காவில் 'டியூன் வங்கி'யில் ஒரு லட்சம் மெட்டுகளை கொட்டி வைத்திருக்கிறார்கள். வேண்டியவர்கள் வேண்டியதைப் பொறுக்கிக் கொள்ளலாம்' என்கிறது விகடன்.

பொறுக்குபவர்கள் தங்கள் தேவைகளுக்கும் தம்மையொத்த பொறுக்கிகளையே பொறுக்கி எடுக்கிறார்கள். மணிரத்னம், ஷங்கர் வகையறா தங்கள் அலைவரிசையில் ரகுமானைக் கண்டுபிடித்துச் சேர்த்துக் கொண்டதில் வியப்பில்லை.

ஏற்கனவே ஒரு லட்சம் மெட்டுகள் உள்ளன என்றால் 'லட்சத்து ஒன்று' என அடுத்தபடியில் கால் வைப்பவன்தான் இசையமைப்பாளன். புதிதுபுதிதாய் தன் கண் முன்னே விரியும், வாழ்க்கையை, அதன் உணர்வுகளை பிரதிபலிப்பவனே கலைஞன். 'எல்லாம் கங்கைக்கரையிலேயே சொல்லியாகிவிட்டது' எனும் கூட்டம்தான் 'எல்லாம் கம்ப்யூட்டருக்குள்' இருப்பதாகவும் கூறுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஹார்மனியில் ஒலி உடன்பாடு, ஒலி முரண்பாடு இரண்டின் இயக்கத்தையும் ஆய்வு செய்த மாபெரும் சிம்பனி இசை ஓவியங்களைத் தீட்டிய மொசார்ட்டும், பீத்தோவனும் இசையின் இயக்கத்தைக் கணக்காக நிருபித்த பித்தகோரசையே தம் முன்னோடியாக அறிவித்தார்கள்.

ராஜாவை இருட்டடிப்பு செய்ய முயல்வோர் பித்தகோரஸின் சமகாலத்திய கிருஷ்ண பரமாத்மாவின் வாரிசுகளாக இருக்கிறார்கள்! வரலாற்றின் நகைச்சுவை தான்!

ஹார்மனி ததும்பும் இசைக்கோர்வைகள் திரையிசையில் வந்து விழ விழ ''என்ன, எல்லாம் சினிமா குப்பை தானே' என்று அவாள் முனகிக் கொண்டனர். ஆனால் தனி இசையாக 'என்ன பெயரிட்டு அழைப்பது' (How to Name it), 'காற்றைத் தவிர வேறில்லை (Nothing but wind) - ஆகிய இரு இசைப்பேழைகள் வந்தவுடன் இசையறிஞர்கள் திரும்பிப் பார்த்தார்கள்; அவாளோ முகம் திருப்பிக் கொண்டார்கள். இப்போது 'கிராண்ட் சிம்பனி' ஒலிப்பேழையாக வருவதற்கு முன்பே 'இது கலவை இசைதான்' (Fusion) என்று 'கிசுகிசு' பரப்புகிறார்கள். 'அக்மார்க்' அய்யர்வாள் எல். சுப்பிரமணியம் போன்றோரே செய்யத்துணியாத, முடியாத ஒன்றை 'பண்ணைப்புரத்தான்' செய்வதா என்ற வக்கிரம் தவிர இது வேறென்ன?

தற்போது இளையராஜா அமைத்திருக்கும் சிம்பனி ஐந்து இசையோட்டங்களில் அமைந்த முற்றிலும் மேலை இசை முறையிலானதுதான். எனினும் இந்திய இசை மரபிலிருந்து பெற்ற தாளமுறைகள், பாணி, அலங்காரங்கள் ஆகியவை நிறைந்து காணப்படுவதாக பிலார்மோனிக் இசைக்குழுவினர் கூறுகின்றனர். அந்த சிம்பனியின் ஒலிப்பேழை வெளிவரும்போது தான் அதன் செய்தி (உள்ளடக்கம்) குறித்து நாம் அறிய இயலும்.

''சிறந்த இசைக்கு வார்த்தைகளின் துணை தேவையில்லை'' என்கிறார் ராஜா. அதாவது, தன்னளவில் முழுமை பெற்ற சுயேச்சையான கலை வடிவம்தான் இசை. மார்க்சிய இசை அறிஞரும், ஜெர்மானிய இசையமைப்பாளருமான ஐஸ்லர் ''திரைப் படத்தில் பின்னணி இசை என்பது காட்சிக்கு கனம் கூட்டுவதாக மட்டும் இருக்கக் கூடாது. காட்சியின் மீதான விமரிசனமாக இருக்க வேண்டும்'' என்கிறார்.

ஆனால், நமக்குக் கோபத்தைத் தூண்டாத காட்சியில் ராஜாவின் இசையில் கோபம் கொப்புளிக்கிறது! நமக்கு அருவெறுப்பூட்டும் காதல் காட்சிகளில் அவரது இசை கொஞ்சுகிறது! நம்மைச் சிரிக்கச் செய்யும் சோகக் காட்சிகளில் அவரது இசை கண்ணீர் விடுகிறது. நாய்க்குடைகளாய் மறைய வேண்டிய பாடல்வரிகள் இசைய முதம் பருகி ஆலமரமாய் நிலை பெறுகின்றன. ராஜாவின் இசையெனும் நறுமலர்களால் மூடப்பட்ட மலங்கள் வாழ்வு பெற்று விடுகின்றன.

நாம் காறி உமிழ்ந்துவிட்டு அரங்கை விட்டு வெளியேறும் காட்சிகளிலிருந்து 'உணர்வெழுச்சி' பெற்று அவரால் எங்ஙனம் இசையமைக்க முடிகிறது? 'நான் ஈடுபாட்டோடுதான் செய்கிறேன்', என்கிறார் ராஜா. இது அதிர்ச்சியூட்டுகின்ற, ஆனால் நாணயமான பதில். ரே, கோடார்டு, ∴பெலினி என்று பத்திரிகைகளில் அறிவுஜீவியாக நடித்துவிட்டு, திரையில் ஜிகினா உடையில் அற்பர்களாக வாழும் வேடதாரிகளை ஒப்பிடும்போது இந்தப்பதில் நாணயமானது; அதே நேரத்தில் மசாலாக்களுக்கு ஈடுபாட்டோடு இசையமைக்கும் நபர் சிம்பனி படைக்கும் கலைஞனாக எங்ஙனம் உயர முடியும் என்பது முரண்பாடு.

''அற்பமான காட்சிகளுக்கு இவர் இவ்வளவு சிரமப்பட்டு ஏன் விரிவாக இசையமைக்கிறார்?'' என்று அதிசயிக்கிறார் ராஜாவின் நண்பர் பம்பாய் இசையமைப்பாளர் சந்த்வார்க்கர். ''நான் பரிசோதனைகள் செய்து பார்க்கிறேன்'' என்கிறார் ராஜா. அந்த முரண்பாட்டுக்கு இதுவே பதில். திரையில் ஓடும் காட்சிகளுக்கல்ல, அவை தன் மனக்கண்ணில் தோற்றுவிக்கும் காட்சிகளுக்குத்தான் அவர் இசையமைக்கிறார். காட்சியின் சிறுமை இசையால் பெரு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மைப்படுத்தப்படுகிறது. இசையின் பெருமை காட்சியால் சிறுமைப்படுத்தப்படுகிறது.

ஏன், அவற்றின் நெடியைக் கூட்டத்தான் இளையராஜாவை அமர்த்திக் கொள்கிறானேயன்றி, ஐஸ்லர் கூறுவது போல இசை விமரிசனம் எழுதி வாங்குவதற்கு அல்ல.



ராசய்யா புத்தம் புதிதாகச் சிம்பனி இசை அமைக்கும் இடம்:
லண்டன் ராயல் ஃபில்ஹார்மோனிக் ஆர்க்கெஸ்ட்ரா:

பாடல்களைப் பொறுத்தவரை, கதை, காட்சியமைப்பு பற்றித் தெரிந்து கொண்டு அவற்றை இசைப் படிமங்களாக்குகிறார் ராஜா. இவ்வாறு ஒலியின் கவிதை எழுதப்பட்டபின் அதன் பரிமாணத்தை எட்டிப்பிடிக்க முடியாமல் சொல்லின் கவிதை (பாடல்) தடுமாறுகிறது. இசைப்படிமங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் காட்சிப்படிமம் தோற்று விழுகிறது.

மலங்களும் குப்பைகளும் 'சாகாவரம்' பெறுவது இப்படித்தான் என்று நாம் விளங்கிக் கொள்ளலாம்; ஆனால் இவற்றுக்கு ராஜா ஏன் சாகாவரம் 'அருள' வேண்டும்? வியாபாரம் — அதுதான் பதில். அற்ப உணர்வுகளை காசாக்கும் நோக்கத்திற்காகவே படம் எடுக்கும் தயாரிப்பாளன்.

இளையராஜா மட்டுமின்றி தொழில்முறைக் கலைஞர்கள் அனைவருமே சந்திக்கும் பிரச்சினை இது. எனினும் கவிதையும் ஓவியமும் பேசும் மொழி இசையைக் காட்டிலும் துல்லியமானது; அது சமூகத்தின்மீது ஏற்படுத்தும் தாக்கமும் கூர்மையானது. இசையோ சூக்குமமானது எளிதில் பிடிக்கு அடங்காதது.

வர்த்தக ஏடுகளின் கதை, கவிதைகளின் கருத்துக்கு ஏற்ப ஓவியம் வரையும் ஓவியன் தன் சொந்தக்கருத்தைச் சொல்ல ஓவியக்காட்சி வைக்கிறான்! ராஜா சிம்பனி அமைக்கிறார்!

எனினும் இந்தக் கலை வியாபாரத்தில் ஒரு கலைஞன் செய்து கொள்ளும் சமரசத்தின் அளவு அவனுடைய நாணயத்தையும்.

(தொடர்ச்சி பக்: 56)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி

**இல :22**



குறுக்கெழுத்துப்போட்டியில் பலர் ஆர்வம் காட்டியுள்ளமை, எமக்கு கிடைத்த விடைத்தாழ்கள்மூலம் தெரிவித்துள்ளது. போட்டியில் கலந்துகொண்டோருக்கும், பரிசுகள் கிடைத்தோருக்கும் எமது வாழ்த்துகள்.

பரிசுகளாக கவிதைத்தொகுப்பு, சிறுவர் நூல்கள், ஏனைய சஞ்சிகைகள் என்ற வகையில் அனுப்பிவைக்கப்படும். சஞ்சீவி உங்கள் கைகளுக்கு காலக்கிரமத்தில் கிடைத்ததும், 15 நாட்களுக்குள் கு.எ. போட்டியின் பூர்த்தி செய்த தாளினை சஞ்சீவிக்கு அனுப்பிவையுங்கள்.

போட்டியின் பரிசுக்குரியவர்களென சஞ்சீவியில் பெயர்கள் வெளியானோரில் சிலருக்கு பார்சில்கள் கிடைக்கவில்லையென அறிகின்றோம். அப்படி பரிசில்கள் கிடைக்கப்பெறாதோர் சஞ்சீவியுடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். (எழுத்துமூலம்).

<u>இடம்-வலம்:</u>

1- 2: 1983ம் ஆண்டு இலங்கையில் இனக்கலவரம் நடந்த மாதம் இதுவே.

9-12: உலகளவில் மட்டுமல்ல, ஈழத்திலும் உயிர்களை அழித்துக்கொண்டிருக்கும் இது முடிவுறாதா என்ற ஏக்கம் யாவரிடமும் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

6- 4 : வாழ்வே இருளாகிப்போயுள்ள எம்மக்கள் இதனை விரும்புவர்
15-14 : வேதனைக்கு உள்ளாக்குதலை இப்படியும் கூறுவர்.
17-20 : நடந்தவிடயத்தினை அறிந்துகொள்வதற்கு இது உதவும்.
29-27 : எமது மக்கள் கானஎண்ணிய நனவுகளில் பல இதுவாகிவிட்டது.
32-31 : எமது ஈழநாட்டின் வரலாற்றில் இது பலதடவை படிந்து முரண்பாடுகளை ஏற்படுத்திவிட்டது.
36-39 : எமது மண்ணின் மக்களுக்கு இது சொல்லத்தடையாகிப்போயுள்ளது.
41-43 : நெருக்கடியான வாழ்க்கையால் இது ஏற்பட்டுள்ளது.
45-48 : இந்த இடத்தில் விளையாட்டு, பொதுக்கூட்டம் நடைபெறும்.
52-49 : இது மூளையிலிருந்து உடம்பின் பலபாகங்களுக்கும் உணர்வுகளைக்கொண்டுசெல்லும் மெல்லிய இழையாகும். குழம்பியுள்ளது.
58-57 : இதனை கனதி என்றும் கூறுவர்.
62-60 : எமதுநாட்டில், வீட்டுப்பெண்கள் திண்ணைமெழுகுவதற்கு இதனை பயன்படுத்துவர்.

மேல்-கீழ் :

1-25 : கையாண்மைமூலம் பிரயோகிக்கப்படும் கருவியினை இப்படியும் கூறுவர்.
6-14 : இது சுத்தைகுத்தாத, நிறைவுபெற்றதாய் இருப்பின் முழையும், செடி அல்லது மரமும் செழிப்புறும்.
-8- : இதனை கரம் என்பர்.
11-27 : இது உதவி எனப்பொருள்படும்.
15-47 : இது காட்டினையும், காட்டுமிருகங்களினையும் பாதுகாக்கும்துறையாகும். இது குழம்பியுள்ளது.
29-45 : கறுப்பு நிறத்தின் தன்மை இதுவாகும்.
32-24 : பார்ப்பவர், கேட்பவர் முதலியோர் மனத்தில் அழகுணர்வைத்தோற்றுவிக்கும் வகையிலும், மண்மணத்துடனும் 'இது' இருந்தால் மக்கள் மகிழ்வர்.
34-58 : இந்தமரம் 'பூ'வுடன் சேர்ந்த அரசு ஆகும்.
41-57 : எமது நாட்டிலும் பல பத்தாண்டுகளுக்கு முன் இந்த நோய்வாய்ப்பட்டு பலநூற்றுக்கணக்கானோர் மாண்டுபோயினர். இந்நோயினை கொள்ளைநோயென்றும் கூறுவர்.
52-60 : 'எம்' என்ற சொல் இப்படியும் கூறப்படும்.
62-38 : சிறுவயதில் எமக்கு பேய் என்று இல்லாத ஒன்றினைச்சொல்லிப் பயங்காட்டியதுபோல், மதவாதிகள் வேற்றுமொழியில் இப்படிக்கூறி வெருட்டுகின்றனர். இது குழம்பியுள்ளது.
64-48 : சீனாவை இப்படியும் அழைப்பர்.

இட-வலம் :

1. 8 : இனக்கலவரம்
9.12 : சைனியம்
18.20 : தாகம்
25.27 : சாமம்

மேல்-கீழ் :

1. 9 : இசை
2.50 : மனிதாபிமானம் (குழம்பல்)
3.35 : இயக்கம் (குழம்பல்)
25.33 : சாதி

49.54: சிம்மாசனம்
29.31: பூசல்
37.40: பாவர்
44.47: பாமரன்
59.61: திம்பு
24.23: வாவி
63.64: விதி

6.14: வசை
30.54: சவரம்
24. 8: வாதம்
23.47: வில்லன்
64.56: திசை
44.60: பாசம்

பரிசில்கள் பெற்றோர் விபரம்:

1: T.Thayaruban
Pilehaven
5610 Assens.

2. Mrs.Santhini.s
Vestergade
4340 Tølløse

3. V.Nathan
Sprotoften
5800 Nyborg.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | 2 ன | 3 க் | 4 க | 5 ல | 6 வ | 7 ர | 8 ம் |
| 9 சை | 10 வி | 11 ய | 12 மி | ■ | 14 சை | ■ | 16 த |
| ■ | 18 தா | 19 க | 20 ம் | ■ | ■ | 23 வி | 24 வா |
| 25 சா | 26 ம | 27 ம் | ■ | 29 பூ | 30 ச | 31 ல் | ■ |
| 33 தி | 34 பி | 35 இ | ■ | 37 பா | 38 வ | 39 ல | 40 ர் |
| ■ | 42 ம | ■ | 44 பா | 45 ம | 46 ர | 47 ன் | ■ |
| 49 சி | 50 ம் | 51 மா | 52 ச | 53 ன | 54 ம் | ■ | 56 சை |
| ■ | ■ | 59 தி | 60 ம் | 61 பு | ■ | 63 வி | 64 தி |

அன்பான வாசகர்கட்கு,

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும் போதெல்லாம் எதிர்ப்புக்குரல் கொடுத்துப் போராடவும், உரிமைகளை பாதுகாப்பதற்கும் என ஓர் தீர்க்கமான அமைப்பு எமது மக்களுக்கு இன்று வரை இல்லாதிருந்த போதும், சஞ்சீவியானது தன்னாலியன்றளவு இதற்காகக் குரல் கொடுத்துக் கருத்துக்களை தெரிவித்தும் வருவது யாவரும் அறிந்ததே.

கடந்த சில காலங்களாகச் சஞ்சீவி தாமதித்து வெளிவருவதும், ஆண்டுக்கான எண்ணிக்கை விகிதம் குறைந்து வருவதும் நிதி நெருக்கடியின் விளைவே.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளின்பால் அக்கறையுள்ளவர்களும், அபிமானிகளுமான உங்களிடமிருந்து சஞ்சீவி தொடர்ந்தும் சிறப்புற வெளிவர, உங்களால் இயன்ற நிதியுதவியை எதிர்பார்க்கின்றது.

நீங்கள் வங்கி மூலம் நிதியனுப்ப வேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்:

A/C NO: 7601-408876-9
VESTJYSK BANK
7500 HOLSTEBRO

அல்லது: POST-GIROKONTO: 3653528

சஞ்சிகை தொடர்புகளுக்கு
CHANCHIVE
DENMARKSGADE 10
7500 HOLSTEBRO -(DENMARK)

ஆசிரியர் குழு.


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடிதங்கள்

அன்புடன் சஞ்சிகைக்கு,

தங்களின் மலர்-24 நீண்ட இடைவெளியின் பின் பெற்றுக்கொண்டேன். மகிழ்ச்சி அடைந்தேன்.

1983 இல் இருந்து 93 வரையிலான இலங்கையின் பத்துவருட கால வரலாற்றுத் தகவுகள் "நோக்கு" வில் இடம்பெற்றிருந்தது. வரலாற்றுத் தடயங்களைக் கொஞ்சம் திசைகாட்டி இல்லாமல் இனிநாம் எங்கே செல்கிறோம்? எங்கே செல்வோம்? எதை நோக்கிச் செல்லவேண்டும்? என்கின்ற கருத்தையொட்டிய எண்ணங்களை வெளிப்படுத்தியிருந்தது. வரலாற்றை அலசுவதும், வரலாறுகளிலிருந்து படிப்பினைகளை விமர்சன ஆய்வுகளினூடு பெற்றுக்கொள்ளவேண்டியதுமான அவசியம் எமக்கு முன் உள்ளது. போராட்டங்களினூடு மட்டும் பதம்பார்க்கும் எண்ணவோட்டத்தைத் தொலைத்துவிட்டு ஒத்துப்போகக்கூடிய விடயங்களில் சமவேளைப்பட்டத்தை விரைவில் பல்முனை சார்ந்த விடயங்களில் ஆராய்வதும் வழிமுறைகளைச் சிந்திப்பதும் அவசியமாகின்றது.

கருத்துக்களத்தில் பெண் உரிமை, பெண்ஒடுக்குமுறை, ஆண்ஆதிக்கம் என்ற கருத்துவிமர்சனம் 'வாசிக்க' நன்றாக இருந்தது. சுமதி, வேதா இலங்காதிலகம் இரு வேறுபார்வைகளை பெண் உரிமை தொடர்பாக மையப்படுத்தி இருந்தனர். சுமதியின் கட்டுரை தொடர்பாக 'சமர்' ஆசிரியர் தமது கருத்துக்களின் ஊடாக 'அனைவரும்' வெளிப்படையாக விமர்சித்திருந்தது வரவேற்புக்குரிய விடயம். 'சமரி'ன் கருத்து, நாகரீகம் கெடாதபடியும் போலச்சேர்க்கப்படியதாக கருத்தில் 'இலக்கியம்' பயன்பட்டிருந்தால் நன்றாக இருக்கும் என்பது என் கருத்து.

பெண்கள் பேசுவதோடும் எழுதுவதோடும் நின்றுவிடாமல் மகளிர் சம்மேளனம் ஒன்றை உருவாக்கி அதனூடு போராட்டத்தை முன்னெடுத்துக்கொள்ளத் தயாரா? என்கின்ற கேள்வி எழத்தான் செய்கின்றது. பல்முனைகளில் சிலமுனைவுகளில் ஆதரவு கப்படும் பெண்கள் அமைப்புகள் இருந்தாலும் 'மந்த' அமைப்புக்களாகவே உள்ளன.

துரை சண்முகத்தின் 'போதும் போதும்' கவிதை, 'ஒட்டுரகம்' சிறுகதை மிகநன்றாக இருந்தது. தேவையான நேரத்தில் தேவையான இடத்தில் பிரசுரித்தமைக்கு பாராட்டுகள்.

அன்புடன்,
உ.தி. சபாபதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கீழ் வரும் "மூன்றாவது பாதை" தொடர்பான கேள்விகள், கருத்துக்களுக்கான பதில்கள் இதழ்: 26ல் வெளிவரும் என்பதனை அறியத்தருகின்றோம்.

" மூன்றாவது பாதைக்கான அரசியல் தீர்மானம்" இந்த யாப்பு சம்பந்தமாக எங்களின் சில சந்தேகக் கேள்விகளுக்கு உங்களுடைய பதில் சஞ்சிகை மூலமாக வாசகர்களாகிய நாம் எதிர்பார்கின்றோம்.

(1). 3. "ஆ" "சாதி அமைப்பிற்கு எதிராகப் போராடுதல்"
இந்தக் கோட்பாட்டை மாற்றி, சமதர்மபொதுவுடமை (சோசலிசம் = எல்லாமே அரசாங்கச் சொத்து என்னும் பொருளாதாரக் கோட்பாடு) கொள்கையுடைய அரசாங்கத்தை அமைப்பதன் மூலம் சாதியை இல்லாதொழிக்க முடியாதா?

"இ" " ஆண் ஆதிக்கத்திற்கெதிராகப் போராடுதல்"
ஆண்கள் பலமாக இருப்பதால் ஆணாதிக்கம் நிலவுகின்றது.
(உ+ம் 1.) கணவனால் கைவிடப்பட்ட மனைவியால் (தமிழ்ப்பெண்ணால்) தமிழ் ஈழத்தில் கௌரவமாக வாழ முடியுமா?
இவ்விடயத்தை நீங்கள் ஏன் சாயவாழ்க்கையை மேற்கொள்ளுதல், உடல் பலம், பொருளாதாரம் போன்றவிடயங்களால் வென்றெடுக்க நினைக்காமல், ஆண் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டம் என்ற நிலைப்பாட்டில் உள்ளீர்கள்?

ஆண்கள் பெண்களுக்கெதிராக என்ன செய்கின்றார்கள்?

"ா." இலங்கை அரசு, பிராந்திய வல்லரசு மற்றும் ஏகாதிபத்தியங்களுடன் சமரசம் செய்வதினூடாகச் சாதிக்க முடியாது.
(சமரசம் = போரை முடிவுக்குக் கொண்டுவருதல். இது பேச்சுவார்த்தை மூலம் தான் முடியும்.)
சீனாவில் கொடுங்கோல் ஆட்சி புரிந்த மஞ்சு வம்சத்திற்கு எதிராக மா. ஓ சேதுங் போராடிக்கொண்டிருந்த போது யப்பான் சீனாவை முற்றுகையிட்டது. அந்த நேரம் பொது எதிரியான யப்பானை விரட்டி அடிப்பதற்கு மா. ஓ சேதுங் மஞ்சு மன்னனுடன் ஒரு சமரசம் செய்து முதலில் யப்பானை இருவருமாக விரட்டி அடித்து, பின் மஞ்சு வம்ச மன்னனுக்கு எதிராகப் போராட்டத்திலும்

www.tamilarangam.net

வெற்றி பெற்றார் மா. ஓ. சேதுங். அப்படியான சமாச்சாரம் சாத்திய மாகாது என நீங்கள் நினைக்கிறீர்களா?

(குறிப்பு:- மக்கள் குரல் எனும் போராட்டத்தை நடாத்தி வந்த மா. ஓ. காலத்திற்கு ஏற்றாற்போல் பின் புதிய ஜனநாயகம் என்று போராட்டத்தை மாற்றி வந்தார்.)

உங்களின் போராட்டம் காலத்திற்கு ஏற்ப மாறுமா, மாறாதா?

(2). 1. 2. (அ) மதவேறுபாட்டைத் தவிர இலங்கைவாழ் முஸ்லிம்கள் எல்லோரும் தமிழர்களே. (இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம்) இவர்களை நீங்கள் எப்படி ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப் போகின்றீர்கள்? (முஸ்லிம்கள் தாங்களாக தமது போராட்டத்தை முன்னெடுக்காத நிலையில்)

(ஆ) இது தமிழர்களின் பலத்தை மேலும் பலவீனப்படுத்தாதா?

(இ). உங்களின் அந்த அங்கீகாரம் உலக ரீதியில் சாத்தியமாகுமா?

3. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க விரும்பாத ஒரு அரசாங்கத்தை ஜனநாயக தேர்தல் மூலம் தெரிவு செய்வது சிங்கள மக்களே. அப்படி இருக்கும் போது, சிங்கள மக்கள் எமது எதிரிகள் இல்லை என்று நாம் எப்படி கூற முடியும்?

"இத்திட்டத்திற்கு அப்பால்" இந்த தலைப்பிற்குப் பின்

1. அ. உங்களின் போராட்டம் தனிநாட்டிற்கானதா? அல்லது இலங்கை என்னும் ஒற்றையாட்சியின் கீழ் வாழும் சமஷ்டி சமதுவத்துவ ஒருமைக்கு ஆனதா?

ஆ. ஒற்றையாட்சியின் கீழ் போராட்ட நிலைக்கு, சிங்கள மக்களை இணைப்பது நல்லது. ஏனெனில் சில சிங்களத் (வாசுதேவநாணயக்கார போன்ற) தலைவர்கள் தமிழர்களின் உரிமையைக் கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள்.

www.tamilarangam.net

2. வடக்கு கிழக்கு மக்களுக்கிடையில் முரண்பாடு கூர்மையடைந்து தான் இருக்கின்றது. அதை, அதிகார பகிர்ந்தளிப்பின் மூலம் முரண்பாட்டை நீக்கலாம்.

3. தமிழ்நாடு விடுதலைப் புலிகள் என்ற நிலைப்பாட்டைத் தவிர்த்து எமது சொந்த கருத்து என்னவெனில், எல்லாவிதமான தொழிலாளர்களின் சகலவிதமான உரிமையுடன், தேசிய முதலாளித்துவப்போக்கை கையாண்டால் அதில் பிழையில்லை. காரணம், இன்றைய உலகில் ஒரு தேசம் வளர்ச்சி பெற வேண்டுமென்றால் முதலாளித்துவம் நிச்சயமாக எமக்குத் தேவை.

x ——— x

1. அ) மூன்றாவது பாதைக்கான அரசியல் தீர்மானம் என்ற போராட்டம் சாத்தியமாகுமா?

ஆ) அதை, முன்னெடுத்துச் செல்ல தலைவர் யாரால் முடியும்?

2. அ) நீங்கள் தமிழீழத்தில் ஒரு தளத்தை அமைக்காமல் இங்கிருந்துகொண்டு இயங்கினால் அது நிறைவேறுமா?

ஆ) அப்படிப்பட்ட தளங்கள் இருந்தால், அதை தமிழீழத்தில் வெளிப்படுத்திய அறிக்கைகளைக் காட்டவும்.

3. சோசலிசத்தை முதன்முதலில் நிறுவிய லெனின் போன்ற தலைவர்கள் சைபீரியா, ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற நாட்டில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட வேளையில், அந்நாட்டு தளபதியான ஸ்டாலின் ரஷ்யாவில் நிலையான ஒரு போராட்டத் தளத்தை அமைத்திருந்தார். தமிழீழ விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் தமிழகத்தில் தலைமறைவாக இருந்த போதிலும் தமிழ்நாட்டில் அவர்களின் போராளிகள் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார்கள்.

M. வெலிங்டன்
N. றொபின்

(கடிதங்கள் தொடர்ச்சி பக்: 32)

www.tamilarangam.net

# ஒருவன்

சோகியும், சிப்பியும்
நிரம்பிய மடை ஒன்று
உடைந்தது.

சோகியையும், சிப்பியையும்
காகிதக் குண்டானில் நிரப்பிவிட்டேன்.

சோகியும், சிப்பியும்
நிரம்பிய மடை ஒன்று
உடைந்தது.

காகிதக் குண்டானில் ஏடுத்ததை
இல்லை. இல்லை
விழுந்த சொற்களை
ஆமாம். ஆமாம்.
விழுந்ததை அப்படியே விடுவதா?
வெந்து புண்ணாகிவிடும் அல்லவா.

தயக்கம்,
தாமதம்.
அறிவுக் கடலில்
தேரோட்டும்
மீகாமன் நான் மட்டும் தான்!

சபலம் ஒன்று
சந்தம், சாரிகை
எதுகை, மோனை
சீர், தளை.
எங்கே?

அறிவுக் கடலில்
தேரோட்டும்
மீகாமன் நான் மட்டும் தான்!!
சிச்சீ
நான் எழுத இருந்தது
புதுக் கவிதையன்றோ.

ஒரு வினாடி
ஒரு நாள்,

www.tamilarangam.net

ஒரு கிழமை,
கரைந்துவிட்டது.

சபலம் இரண்டு
மீண்டும்
கவிக்கடலில்

கட்டில் போட்டு நிம்மதியாய்
சாய்ந்து கொண்டேன்.
கால் மாட்டில்
கட்டுக் கட்டா கட்டும் கட்டையும்
தலைமாட்டில் பியரும், விஸ்கியும்

மடை தெறித்து
விழுந்த சொற்களை
கட்டத்துள்
காயை நகர்த்திப் பார்த்துவிட்டேன்.

என் மனதில்
"இதுவன்றோ இன்னூற்றாண்டின்
பெரும் கவிதை!
நானன்றோ இன்னூற்றாண்டின்
பெரும் கவிஞன்!!"

உடல் புல்லரிக்க
நீண்டது மூன்றாவது சபலம்
விழுந்த சொற்களை
கட்டத்துள்
காய் நகர்த்திப் பார்த்தும்
கனம் காணாது
என்
கண்கள் அகராதிப்புத்தகம் தான்தேடி

எனக்குள்
ஒருவன்
சிரிக்கின்றான்
அவனை
உனக்கும் தெரியும்.
எனக்கும் தெரியும்.

— வளவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சஞ்சீவி,

"சீனா ஒரு வரலாற்றுத்தடயம்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் பெயர்கள், சம்பவங்கள், பல விளக்கங்கள் அகச்சார்புடன் எழுதப்பட்டுள்ளன என்று திரு சி. சிவசேகரம் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தவறாக உள்ள பெயர்கள், தவறாக உள்ள சம்பவங்கள் அகச்சார்பாக உள்ளவிடயங்கள் சற்றுவிளக்கமாக எழுதும்படி கேட்டுக்கொள்வதுடன், நான் எழுதியகட்டுரை முடிந்த முடிவுகள் அல்ல, தவறுகள் சுட்டிக்காட்டப்படின் மேலும் கட்டுரை முழுமைபெறுவதுடன் அக்காலகட்ட நிலைவுகளை சரியான முறையில் அறிந்துகொள்ளவும் வாசகர்களுக்கு உதவியாக அமையும்.

அறுபதுகளின் சாதியப்போராட்டம் தொடர்பாக சிவசேகரம் அவர்களுக்கு நன்கு தெரியும் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை. ஆனால் அந்த காலகட்டம் கடந்தகால ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அரசியலை விமர்சனத்துக்குள்ளாக்கி நிகழ்காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை முன்னெடுக்கவேண்டிய காலகட்டம் என்பதில் சிவசேகரம் அவர்களுக்கு சந்தேகம் இருக்காது என நம்புகிறேன்.

சிவசேகரம் அவர்கள் தனது கடிதத்தில் எழுப்பிய கேள்விகளாவன

1. ஸ்டாலின், மா.ஓ. சேதுங் ஆகியோரது மறைவுக்குப்பின்பு ருஷ்யா, சீனா எவ்வாறு உடனடியாக தலைகீழாக மாறியது?
2. கலாச்சாரப்புரட்சியை மா. ஓ. ஏன் முடிவுகட்டினார்?
3. டெங்கை, மா. ஓ. ஏன் மீண்டும் பதவியில் அமர்த்தினார்?
4. மா. ஓ அதிகாரத்தில் இருந்தபோது (1971ல் ஜே. வி. பி கிளர்ச்சியில் ஈடுபட்டபோது இலங்கை அரசுக்கு சீனா ஆயுதம் கொடுத்தது) சீனாவின் அயல்நாட்டுக் கொள்கைக்கும் இன்றுள்ள அயல்நாட்டுக் கொள்கைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

இக்கேள்விகள் தொடர்பாக கட்டுரையாளர் மட்டும் தான் பதில் கூறவேண்டும் என்பதில்லை இருந்தபோதும் என்றபடியால் அவர் எழுப்பிய கேள்விகள் தொடர்பாக சில....

1. ஸ்டாலின், மா. ஓ. ஆகியோரது மறைவுக்குப்பின்பு ருஷ்யா, சீனா எவ்வாறு உடனடியாக.....?

1964ல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி முதன் முறையாக இரண்டாக பிளவுபட்டபோது மாஸ்கோ சார்பு (பாராளுமன்றவாதிகளான) கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரித்த கலாநிதி கா. சிவத்தம்பியும் இதுபோன்ற கேள்விகள் பலவற்றை அவரும் நண்பர்கள் மத்தியில் எழுப்பி அக்கட்சியை ஆதரித்தார். அவரை அண்மையில் சந்தித்தபோது "கிழக்கைரோப்பிய மாற்றங்கள் உங்களைப் பாதிக்கவில்லையா?" என நான் கேட்டேன். அவர் தன்னைப் பாதித்துள்ளதாகவும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தான் அவர்களை நம்பியதாகவும் கூறினார். எனவே தான் ஸ்டாலின், மா.ஓ மறைவின் பின்பு, புரட்சியை நடாத்தி வெற்றிகொண்ட புரட்சிகரப் பிந்திய சமூகங்கள் **ஏன்/ எவ்வாறு** திடீரென்று தலைகீழாக மாற நேர்ந்தது என்று ஒரு கேள்வியை எழுப்பி அதனையும் விளக்குவது கலாநிதிகளின் நேர்மையான பணியாகும்

**2.** கலாச்சாரப் புரட்சியை மா.ஓ. ஏன் முடிவுகட்டினார்?

இன்றைய தமிழ் அரசியல் ஆய்வுப் மூன்றாவது பாதையைக் கோருகின்றது. மூன்றாவது பாதைக்கான அரசியல் தீர்மானத்தில் "புதிய ஜனநாயகப்புரட்சி பற்றி முன்மொழிந்திருப்பதாலும், புதிய ஜனநாயகப்புரட்சியை சீனாவில் நடாத்தி வெற்றிகொண்ட தோழர் மா.ஓ. வின் பெயரை மாசுபடுத்துவதாக இக்கேள்வி அமைவதாலும், பட்டிமன்றப் பாணியிலும், மேற்கோள் யுத்தமாகவும் இக்கடிதம் அமைந்துவிடக் கூடாது என்பதால் சுருக்கமாக சிலவிஷயங்களை கூறலாம் என எண்ணுகின்றேன்.

மா.ஓ. கலாச்சாரப்புரட்சியை முடிவுகட்டவில்லை, **சூ.என்.லாய்** தான் **கலாச்சாரப்புரட்சி** '**மிகவும்** இடதுபக்கம் சென்றுவிட்டது' எனக் கூறி நிறுத்தினார். **மா.ஓ ஆரம்பம் முதல் சிறுபான்மையாகவும், நீண்டபடை நடப்பிற்கு சிறிதுகாலத்திற்கு முன்பே அவரின் தலைமை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.** கலாச்சாரப்புரட்சியின் போது அவர் வைத்த முழக்கங்கள் இதனை மிகத்தெளிவாக்குகின்றது.

1. **"எதிரியை எங்கும் தேடாதீர்கள்
கட்சிக்குள் தேடுங்கள்"**

2. **"கட்சித் தலைமையைத் தகருங்கள்"**

3. **"நான் சிறுபான்மையானால் மீண்டும் யெனான் மலைகளுக்குச்
செல்வேன்"**

என்பவற்றை குறிப்பிடலாம்

**3.** டெங்கை மா.ஓ. மீண்டும் ஏன் பதவியில் அமர்த்தினார்?

**டெங்சியா பெங்** கலாச்சாரப்புரட்சியின் போது சகல பதவிகளில் இருந்தும், கட்சி அங்கத்துவத்தில் இருந்தும் மா.ஓ. வினால் விரட்டப்பட்டவர் என்பது சீனக் கம்யூனிஸ்ட்டின் வரலாறு தெரிந்தவர்கள் அறிந்ததே. மா.ஓ. சேதுங் பதவியில் இருந்தபோது மா.ஓ. வின் அடுத்ததாக மா.ஓ. நியமித்தது ஹுவா. குவோ. பெங்கை என்பது அக்கால சீன விளம்பர சஞ்சிகைகளில் இருக்கும் வண்ணக்கலரில் மா.ஓ., ஹுவா குவோப் பெங் கைகோர்த்து வந்த படங்கள் இன்றும் என்கண்ணில் நிற்கின்றது. ஹுவா குவாப் பெங் அதிகாரத்தில் இருந்தபோதே மா.ஓ. மரணமானார்.

**4.** மா.ஓ. அதிகாரத்தில் இருந்த போது (1971ல் ஜே.வி.பி கிளர்ச்சியில் ஈடுபட்டபோது இலங்கை அரசிற்கு சீனா ஆயுதம் கொடுத்தது) சீனாவின் அயல்நாட்டுக்கொள்கைக்கும், இன்றுள்ள அயல்நாட்டுக் கொள்கைக்கும் உள்ள வேறுபாடு என்ன?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சீனக்கட்சியின் 1971ம்** ஆண்டிற்குப் பிந்திய நடவடிக்கைகளை தொடர்பாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, சண்முகதாசன் தலைமையிலான கட்சியின் இரண்டாவது உடைவு ('மூன்று உலகக்கோட்பாடு காரணமாக') வரை, தொகுத்து வேறு பாகங்கள் இருந்து வந்தது குறிப்பிட வேண்டியதும், அவ்வேளை காலகட்டத்திலும் கட்சியின் ஜனநாயகமத்தியத்துவம், கட்சிக் கட்டுப்பாட்டின் காரணத்தினாலும் வெளியில் தெரியாமல் போனதும் குறிப்பிடத்தக்கது.

**1.** ஜே.வி.பி 1971ம் ஆண்டில் கிளர்ச்சியில் ஈடுபட்டதா அல்லது போராட்டத்தில் ஈடுபட்டதா? இதில் பிரச்சினை **கிளர்ச்சியா**/போராட்டமா?

**2.** இலங்கையில் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளை சீனக்கட்சி அங்கீகரித்தமை.

I. நா. சண்முகதாசன், K. A சுப்பிரமணியம், K செந்திவேல், M.A.C. இக்பால் தலைமையிலான கட்சி

II V.A. கந்தசாமி, சொய்சா, ராணமயா, கார்த்திகேசன் தலைமையிலான இரண்டு கட்சிகளை அங்கீகரித்தமை

**3.** ஜே.வி.பியின இலங்கை அரசின மீதான தாக்குதல் காலகட்டத்தில் இலங்கை அரசுக்கு சீனா ஆயுதம் கொடுத்தமை பிழையானது என்றும் சரியானது என்றும் கருத்து நிலவியது.

**4.** இலங்கை அரசுக்கு பண்டாரநாயக்கா நினைவு மண்டபம் கட்டிக் கொடுத்தமை தொடர்பாக

**5. தமிழ் மக்களின் தேசியவிடுதலைப் போராட்டம்** தொடர்பாக. இது தொடர்பாக 'சண்முக வரலாற்றுத் தடயம்' என்றும் கட்டுரையில் சுருக்கமாக கூறப்படுகின்றது.

இத்தகைய கேள்விகளையும்/ கருத்துக்களையும் அன்று சரியாக அறியமுடியாமல் போனமையினால் அக்கட்சி சிதைவுண்டு போனமையும், தமிழ்ப்பகுதிகளிலிருந்து அகற்றப்பட்டமைக்கும் காரணமாக அமைந்தது. இன்று தமிழ் மக்களின் (தாழ்த்தப்பட்டவர்கள் உட்பட அனைத்து மக்களின்) மீது குண்டு வீசும் விமானங்கள், ஆயுதங்களை சீனா கொடுத்தும் உள்ளது. எனவே மா.ஓ. சேதுங் முன்வைக்காத "மூன்று உலகக்கோட்பாடு" என்றும் தத்துவத்தை மா.ஓ. வைத்ததாகக் கூறிக்கொண்டு மூன்றாம் உலகநாட்டு மக்களின் வீரம் செறிந்த தேசியவிடுதலைப்போராட்டங்களை நசுக்க ஆயுதம் வழங்கும் சீன அரசின அன்றைய கொள்கையும் பிழையானது. அதை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதால் இன்றும் பிழையானது. பிழை + பிழை = எப்போதும் சரியாகாது.

சிவசேகரம் அவர்களால் மேல் எழுப்பிய கேள்விகள் இன்றைய சீனா ஆட்சியாளரையும், இன்றைய சீன ஆட்சியாளரின் (டெங்கியம்பல்) நிதி உதவியுடன் அரசியல் கடை வைத்திருக்கும் "புதிய ஜனநாயகம் கட்சியினரையும்" பாதுகாக்கும் பாணியில் அமைந்தது ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவரின் கருத்துக்கள் மீதான எனது கருத்துக்களை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். அவரின் மற்றைய விஷயங்களுடன் எனக்கு உடன்பாடு உண்டு.

**கலாச்சாரப் புரட்சி ***

புரட்சிக்குப் பிந்திய சமூகமான சோவியத் ரஷ்யாவில் ஸ்டாலின் மறைவுக்குப்பின்பு கட்சிக்குள் இருந்த முதலாளித்துவப் பாதையாளர்கள் ரஷ்யாவில் ஆட்சியைக் கைப்பற்றினார். எனவே, அதே போன்று சீனக்கட்சியிலும் இருந்த முதலாளித்துவப் பாதையாளரை இனங்காணுவதற்காக மீண்டும் சீன சமூகத்தில் ஒரு கலாச்சாரப் புரட்சியை அல்ல, பல கலாச்சாரப்புரட்சியை நடத்துவதனூடாக கட்சி அங்கத்துவத்தில் உள்ள முதலாளித்துவ மீட்சியாளர்களை களை எடுக்க முடியுமென மா. ஓ. கருதினார். எனவே நான் ஸ்டாலினின் மறைவுக்குப் பின்பு முதலாளித்துவம் மீட்சி பெற்றதனால் ஏற்பட்ட மார்க்சிய அனுபவத்தினை உள்ளடக்கப்பட்ட மார்க்சிய கருத்தியலுக்கு புது இரத்தம் ஊட்டிய தோழர் மா. ஓ. சேதுங்கின் நடைமுறையினை மார்க்சியர்களால் (புதிய மார்க்சியர்கள் உட்பட) விமர்சனத்துக்கு உட்படுத்த முடியாமல் உள்ளது. ஆனால் அவர் கூறிய சில மேற்கோள்களை தமது கருத்துக்கு சாதகமாக பயன்படுத்த முயல்வதும் இறுதியில் மூக்குடைபடுவதும் தான் யதார்த்தம்.

நன்றி.

அன்புடன்,
சாந்தன்.

---

நட்புடன் சஞ்சீவி

ஆசிரியர் குழுவினருக்கு!

வணக்கம். சஞ்சீவி (மலர் 23) கிடைக்கப் பெற்றேன். நன்றி. கொழும்பின் அரசின் கெடுபிடிகளால் எவ்விதக் குற்றமும் செய்யாது – சில வேளைகளில் வடபகுதித் தமிழனாய் ஜனித்தது ஒரு குற்றமோ தெரியவில்லை – அரச விருந்தாளியாக ஒரு மாதமளவில் இருக்க வேண்டியதாய்ப் போனமையால் உங்கள் இதழைத் தாமதித்துப் பார்க்கும் சந்தர்ப்பமே கிடைத்தது. கிடைத்துப் படித்தவுடன் விமர்சனம் எழுத உத்தேசித்தும் சில காரணங்களால் இயலாது போய் விட்டது. தாமதித்தற்கு மனம் வருந்துகின்றேன். மன்னிக்க வேண்டுகிறேன்.

காலம் தாழ்த்தியாகிலும் உங்கள் இதழ் வந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. உங்களின் எதிர்நீச்சலுக்கு நிச்சயம் பலன் கிடைக்கும். தளராதீர்கள். உங்கள் எதிர்கால முன்னேற்றத்துக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

இதழின் அட்டைப்படம் இலங்கை நிகழ்வுகளை நினைவுறுத்துவதாய்...... "நோக்கு" மிகவும் கவனத்துடன், தமிழர்களைச் சிந்திக்கத் தூண்டுவதாகவும் எழுதப்பட்டது பாராட்டத்தக்கது!

www.tamilarangam.net

சாந்தன் எழுதிய "சண் ஓர் வரலாற்றுத் தடையம்" சண்ணின் கொள்கைகளையும், கடைப்பிடிப்பை விதந்துரைத்தது. உண்மையில் சண் அவர்கள் சில விடயங்களில் ஆற்றிய பங்களிப்பு மறக்கமுடியாதவை, மறைக்கக் கூடாதவை, என்பது உண்மை. ஆனால் அவர் ஒரு வரலாற்றுத் தடையம்? சாந்தன் அவர்களுக்கும், சஞ்சீவி ஆசிரியர்கட்கும், இவ் விடத்தில் ஒரு விடயம். தடையம் என்பது ஒரு பிழையான தடயம் என்பதே சரியானது. தடம் என்ற சொல்லில் இருந்தே தடயம் என்ற சொல் உருவானது. தடம் என்றால் பதிவு, அடையாளம் என்றே பொருள்படும். இவ்வழிப் படையிலே தடயம் உருவானது. தொடரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் உங்களால் களையப்படும் என எதிர்பார்க்கின்றேன். மேலும் தடையம் எனில் தடை செய்யும் ஒன்று எனப் பொருள்படும் என்றே எண்ணுகின்றேன். சில வேளைகளில் இக்கருத்தில் தான் நீங்கள் இப்பதத்தைக் கையாண்டீர்களோ தெரியவில்லை. அவ்வாறிராது என்றே நான் நம்புகின்றேன். எப்படியாயினும் சில வரலாற்றுக் குறிப்புக்களால் இத்தொடரை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

வளவனின் இன்று 'பௌர்ணமியில் மறைந்த கவியின் திருநன்று கரை மீது படமொன்று நீளும் சில வேளை அலைகள் வந்து கடல் கொண்டு போகும்," என்ற வரிகளின் தாக்கம் நிறைவாகத் தெரிகிறது. மேலும் "கவிதையும் தலைப்பும்" பொருத்தமற்றது. "புலிபோட்டு விளக்கிய கொடு தாம்பாளம் ஏந்தும் எழிவானில்" என்ற வரிகளால் அன்னியப்பட்டு நிற்கின்றன.

ஹரனின் 'மரணம் ஒன்று தாயகம் நோக்கி"' வெளிநாடு செல்லும் ஓர் இளைஞனின் சிக்கல்களை விபரித்தாலும் இயக்கங்களில் இறப்பதும், தற்கொலைப் போராளியாக இறப்பதும் தியாகம் என்று சொல்லப்படுவது வரவேற்கத் தக்கதாக எனக்குப் படவில்லை. இம்மரணங்கள் தனிப்பட்ட ரீதியில் மதிப்புக்குரியவை. எனினும் இவற்றால் சாதிக்கக் கூடியது என்னவென்பது ஒரு தெளிவற்ற விடயம். இப்படியான இழப்புக்களால் எங்கள் தேசத்திற்கு ஒரு விடிவு கிடைக்குமெனில் இவை பெறுமதியானவை, அல்லாதவிடத்து வீரமரணம் அடைந்தவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கம் பட்டி விடுவதற்கே இவை உதவும்.

இளவாலை விஜேந்திரனின் "ஆண்ட மொழியிலும் ஆண்ட பரம்பரையின் மொழியிலும் ஒரு கவிதை அற்புதம் கடிதங்கள் பகுதியில் பலரின் கடிதங்களை வெளியிட்டமையும் சிலரின் கேள்விகளை மதித்து பதிலளித்துள்ள உங்களின் பொறுப்பும் பாராட்ட வேண்டியதொன்று. எனது முன்னைய கடிதங்களையும் நான் எதிர்பார்க்காத போதும் நீங்கள் தொகுத்து வெளியிட்டுள்ளீர்கள் நன்றி. அனைத்தையும் கையாலே பிரதி பண்ணியுள்ளீர்கள் என்று எண்ணும் போது நெஞ்சுக்குள் என்னவோ செய்கின்றது. செல்வா- சின்னத்தம்பி அவர்கள் தீர்க்கமான விளக்கம் தருவார் என எதிர்பார்த்தேன் ஏமாற்றம். கரவை தாசனின் கடிதம் எழுப்பிய கேள்விகளுக்கு நானும் பதில் எதிர்பார்க்கின்றேன். து. செல்வகுமாரின் கடிதத்தை வெளியிட்டமை உங்கள் நடுநிலைமைக்கு ஒரு சான்று.

கா. நா. சு அவர்களின் பேட்டியை கார்த்திகை இதழிலிருந்து மறுபிரசுரம் செய்திருந்தீர்கள் க. நா. சு.வின் பதில்கள் தீர்க்கமாயிருந்தன. பல விடயங்களை அறியக் கூடியதாயிருந்தது. ஆனால் ஒரு விடயம் லெனின் காலத்தில் மார்க்ஸியத்திற்காய் இலக்கியம் உழைத்தது. ஆனால் தற்காலத்தில் இலக்கியத்திற்காய் மார்க்ஸியம் குறுகி விட்டது. வருந்த வேண்டிய விடயம்.

சிவனின் அமரவானம் சிவக்கும் கவிதையில் உயிர்த்துடிப்புண்டு. பாராட்டப்பட வேண்டிய விடயம். செ. லோகநாதன் அவர்கள் 'நிசநினைவு' மூலம் தனது கிராமத்துக்குச் சென்றுள்ளார்.

சுமதியின் 'இன்னமும் ஏன்'? புலம்பெயர்ந்த பெண்ணாவது சிந்திக்க வேண்டு மௌனக் கோருகிறது. இப்பொழுது சிறிதளவு பெண்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள். சான்று பெண்களால் (புலம் பெயர்ந்த) வெளியிட்டிருக்கும் "மறையாத மறுபாதி" கவிதைத்தொகுப்பு. ஓரிரவில் எல்லோரும் மாறிவிட முடியாது. சிறிது சிறிதாகத் தான் மாறமுடியும், மாற்றமுடியும். ஆனால் விரைவு படுத்தலாம். அதற்கு நாம் தான் - முக்கியமாகப் பெண்கள் தான் பொறுமையுடன் செயலாற்ற வேண்டும்.

செல்வன் அவர்களின் 'கவிஞர் மு. மேத்தாவும் அவரது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிதைகளும்' ஒரு பூரணமற்ற ஆய்வு. ஆய்வு நடுநிலையுடன் செய்யப்பட வேண்டும். மேத்தா தாசனாகவே செல்வன் இருப்ப விரும்புவது போலவே எனக்குத் தெரிகின்றது. வார்த்தை ஜாலங்கள் எல்லாம் கவிதைகளில்லை, என்பது உணரப்பட வேண்டும்.

இப்பொழுது உங்களுக்கு அனுப்பும் வகையிலான ஆக்கங்கள் எதுவும் என் கைவசமில்லை. ஆனால் தொடரும் காலங்களில் அனுப்புவேன். எவ்வாறாயினும் உங்கள் இதழ் என் கையில் கிடைக்கும் வரையில் உங்களுக்கு என் விமர்சனம் வந்து கொண்டேயிருக்கும்.

அன்போடு
மணிவண்ணன்

---

## கர்நாடக சங்கீதம்

நடுக்காட்டிலிருந்த கோயிலிலிருந்து
பறை அழைத்தது
ஆடு குத்துகிற மீசைக்காரக் கறுவல்
தன்முகம் சோகத்தோடு நீண்டு அடித்தான்
பறை ஓய்வுக்குப் பின்னாலும்
நெடுநேரம் அவன் முகத்திலிருந்து கடந்தகாலம்
துயரத்துடன் இசைத்தது

இனி, அனைத்தையும் கழுவிக்கொண்டு போக
சத்தமில்லாத மழை நீண்ட நேரம் அமர்ந்தமர்ந்து
தூறியது
மருதமரங்கள், காயா, இந்தூரன் பனிச்சமரங்கள்
கொப்பா இவற்றில் வெண்மை படிந்தது
பழங்காலத்து கோயில் மணியும்
சனங்களுக்காகவும் வெறுநேரம் இருந்த
தனிமைக்காகவும் சிணுங்கியது

மழைக்குப் பிறகு கறுவல் காலமாகிவிட்டது
கிரவல் பாதையில
புதைந்து புதைந்து வந்தேன்
ஈனல்வரத்தில் பூனையைப் போல மயில்கள் அகவின
பட்டிமாடுகள் நிலவில் மேய்ந்து பிறகும் நனைய நின்றன

**நட்சத்திரன் செவ்விந்தியன்.**
நன்றி சரிநிகர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாற்றம் என்பதே ஒரு ஊமை நாடகம்



- ஜெயா

11.30! இடைவேளையின் போது கன்ரீனுக்குள் நுழைந்த நிவேதா வழமை போலவே ஓரமாக இருக்கும் ஆசனம் ஒன்றில் அமர்ந்து, ஏ.புக் கடுதாசியில் சுற்றி வந்த கரட்டினை மேசைமீது வைத்து விட்டு, இடது புறமாக தெரியும் படிக்கட்டுகளைப் பார்த்த வண்ணம் சிந்துவுக்காகக் காத்திருந்தாள். சிந்துவின் பாட அட்டவணை நிவேதாவுக்கு அப்படியே பாடமானது. கணிதப் பாடம் முடிந்து இடது புறப்படிக்கட்டால் தான் சிந்து வந்தாக வேண்டும் என்பது நிவேதாவுக்கு நன்றாகவே தெரியும்.

அவள் நினைப்பு வீண் போகாமல் சிந்துவும் வந்து கொண்டிருந்தாள். ஆனால் இன்று என்னவோ சிந்துவின் முகம் வீங்கி இருப்பது போல் தெரிகிறது. எப்போதும் மதிய இடைவேளை விடும் கன்ரீனுக்கு வருவோம் என்று காத்திருப்பவள், இடைவேளை விட்டதும் படிகளில் தாவியே இறங்கி வந்து விடுவாள். ஆனால் இன்று வழமைக்கு மாறாக கன்ரீன் பக்கம் கண்ணாடிகளையும் மீறி முகத்தில் அமைதியோ, சோகமோ தெரிகிறது. இறங்கி வந்த சிந்து மெதுவாக நடந்து சென்று சிற்றுண்டி விற்கும் இடத்தில் நின்றாள். இன்று வெள்ளிக் கிழமை. Pizza (ஒரு வகை உணவு) விற்கும் நாள். மேசை மேல் இருக்கும் தன் கரட்டைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டாள். பச்சையாகச் சாப்பிட்டால் உடம்பில் இருக்கும் ஊளைச் சதை குறையும் என்று எங்கோ படித்ததில் இருந்து கரட்டைப் பச்சையாகச் சாப்பிடத் தொடங்கியவள் இன்றுவரை விடவில்லை. ஊளைச் சதைகளும் குறைந்ததாகத் தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன் உடம்பைப் பார்க்கும் போது நிவேதாவுக்கு தன் மேலேயே கோபம் கோபமாக வந்தது. அதே நேரம் சிந்துவின் உடம்பைப் பார்க்கும் போது பொறாமையாக இருந்தது. சற்று தூரத்தில் வரிசையில் நிற்கும் சிந்துவைப் பார்க்கிறாள் நிவேதா. மெலிவிய இடையுடன் அளவான உயரத்துடன் கம்பீரமாக நிற்கிறாள். வெள்ளைத் தோல்களுக்கும் அவளுக்கும் நிறத்தில் மட்டுமே வித்தியாசம். கால்களை ஒட்டிய நீல நிற ஜீன்ஸ் காற்சட்டையும், பூப் போட்ட சின்னதான அரைக்கைச் சட்டையும் மேலே உயர்த்திக் கட்டிய குதிரை வால் கூந்தலுமாக நிற்கிறாள். முகத்தில் கோபம் தெரிந்தாலும் அழகாகத்தான் இருக்கிறாள்.

Pizza + Cola உடன் வந்த சிந்து அவற்றை மேசை மேல் வைத்து விட்டு நிவேதாவுக்கு எதிர்ப்புறமாக இருக்கும் ஆசனத்தில் அமர்கிறாள். "ஹாய்" கூடச் சொல்லாமல் இருவருக்கும் இடையே மௌனம் நிலவுகிறது. சிந்து மனம் குழம்பி இருக்கும் நேரத்தில் ஏதாவது கேட்டால் உடனே எரிந்து விழுவாள் என்பது தெரியுமாகையால் ஏதும் கூறவில்லை. ஆனால் மெதுவாக சிந்துவின் தட்டில் இருக்கும் pizza வை முள்ளுக் கரண்டியால் சின்னச் சின்னத் துண்டாகப் பிரித்து வாயில் போட்டு மென்றபடி Cola வை உறிஞ்சிக் குடித்து விட்டு மேசையில் வைக்கிறாள். எப்போதும் இப்படித்தான். காசு கொடுத்து எதுவுமே வாங்கமாட்டாள் நிவேதா. சிந்து வாங்குவதில் ருசி பார்ப்பது அவள் பழக்கம். தன் உடம்பில் அவ்வளவு அக்கறை நிவேதாவுக்கு.
நிவேதா சாப்பிட்டு மிச்சமாக வைத்த pizza வை ஒரு கடிகடித்த வண்ணம் தன் கலங்கிய விழிகளைப் படபடவென அடித்துக் கொள்கிறாள் சிந்து. எல்லாவற்றையும் கவனித்த நிவேதா இனியும் சும்மா இருப்பது அழகில்லை என எண்ணி,

"என்ன வீட்டில் ஏதாவது பிரச்சனையா?" எனக் கேட்டபடி சிந்துவின் கையை ஆதரவாகப் பற்றுகிறாள்.

"ம்...." என்று தலையாட்டிய சிந்துவின் பார்வை மறுபடியும் எங்கோ போகிறது.

அவர்களிருக்கும் அடுத்த மேசையில் ஒரு ஜோடி தம்மை மறந்து ஒருவர் முகத்தில் ஒருவர் எதையோ தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கடுத்த மேசையில் நான்கு பெண்கள் புகைத்த வண்ணம் தம்மை விட சிரிப்பதற்கு யாருமே இல்லையென பெரிதாகச் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். மேசைகளுக்கு நடுவே சிந்துவின் சக வகுப்பு மாணவன் "அலன்" என்பவனை முதலாம் ஆண்டு மாணவி ஒருத்தி துரத்தித் துரத்திக் காலால் உதைகிறாள்.

"நான் ஏன் அவர்களில் ஒருவராய் பிறந்திருக்கக் கூடாது." சிந்து தனக்குள் கூறுகிறாள்.

www.tamilarangam.net

"யாராய்...?" புரியாத வண்ணம் கேட்கிறாள் நிவேதா.

"அதோ அந்த நாலு பெண்களில் ஒருத்தியாக அல்லது அந்த நாலு பெண்களில் ஒருத்தியாக அல்லது அந்த ஜோடியில் அவளாக அல்லது மூலையில் படித்துக் கொண்டிருக்கிறாளே அவளாக இன்னும் எங்களைச் சுற்றி இருக்கும் யாராவது ஒரு டெனிஷ் காரராய்,........" பட படவென தம்மை சுற்றி இருப்பவர்களைப் பார்த்துச் சொல்கிறாள் சிந்து.

"நிற்பாட்டு! நல்ல காலம் அவர்களில் ஒருத்தியாக நீ பிறக்காததை எண்ணி சந்தோஷப்படு. சின்ன வயதிலேயே அவர்களில் ([illegible]) பேருக்கும் பெரிய பெரிய சோதனைகள் வாழ்க்கையிலே நிறைய. ஆனால் உனக்கோ எனக்கோ அப்படி எதுவும் இல்லை எங்களுக்கு ஒழுங்கான பெற்றோர்கள் இருக்கிறார். எல்லாமே அவர்கள் மேலமாகக் கிடைக்கிறது. பிறகு வேறு என்ன வேணும்... நானும் நீயும் சந்தோஷமாகத் தான் இருக்கிறோம். அது போதும்."

"நீ சந்தோஷமாக இருக்கலாம்... ஆனால் நான் அப்படி இல்லையே."

"உன்னையும் எனக்குத் தெரியும், உன் மனசையும் எனக்குத் தெரியும். சிந்து. நீ இரண்டு தோணியில் கால் வைத்து பயணம் செய்கிறாய். அதனால் தான் உனக்குப் பிரச்சனை ஏதாவது ஒரு தோணியினைத் தெரிவு செய். பயணமும் விரைவாகும், உனக்கும் சந்தோஷம் வரும்."

நிவேதா சொல்வதைக் கேட்க சிந்துவுக்கு கோபம் தான் வருகிறது, ஆனாலும் பதிலுக்கு எதுவும் கூறாமல் இருக்கிறாள்.

Cola வை மறுபடியும் உறிஞ்சிக் குடித்த நிவேதா, "அது சரி. அப்படி என்ன வீட்டில் பிரச்சனை?" - துருவுகிறாள்.

சிந்துவின் மௌனம் சிறிது நேரத்திற்கு தொடர்கிறது. "நீயும் நானும் இரண்டு வருடமாய் பழகி வருகிறோம். என்னைப் பற்றி நன்றாகத் தெரியும் என்று சொல்கிறாய். ஆனால், அப்படியிருந்தும் நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லை. நீ சொல்லுகிற மாதிரி நான் இரண்டு தோணியில் பயணம் செய்யவில்லை. ஒரு தோணியில் தான் பயணம் செய்கிறேன். எப்படியும் வாழலாம் என நான் வாழவில்லை. இப்படித்தான் வாழ வேண்டும் என எனக்குள் நானே ஒரு திட்டம் போட்டு வைத்திருக்கிறேன். அதன்படி வாழவும் தொடங்கி விட்டேன். என் வாழ்க்கையை ஓட்டத் தேவையான துடுப்புகளை நீ சொல்கிற அந்த இரண்டு தோணியில் இருந்தும் தெரிவு செய்கிறேன், அவ்வளவு தான்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஆனால் நீ பயணம் போகிற தோணியை நீயே உருவாக்க இருக்கிறாய் சிந்து. அதனால் தான் அது உறுதி இல்லாமல் இருக்குது. எதையும் உருவாக்குவதற்கு ஒரு அளவு பரிமாணம் இருக்கு. ஆனால் நீ உருவாக்கிய தோணி அதற்கெல்லாம் அப்பாற்பட்டது. அதனால் தான் அடிக்கடி பழுது வருகிறது."

இதற்கு மேல் எதுவும் கதைத்தால் நிவேதாவின் போதனையைத் தான் கேட்டாக வேண்டும் என்பதால் சிந்து எதுவும் கூறாமல் இருக்கிறாள்.

-சிந்துவைப் பொறுத்த வரை நிவேதா ஒரு கிடைத்தற்கரிய நண்பி. எந்த ஒரு தமிழ் நண்பர்களுமில்லாமல் தன் பாடசாலை சக வகுப்பு டெனிஸ் நண்பர்கள், பக்கத்து முன் வீட்டு டெனிஸ் நண்பர்கள் இப்படி டெனிஸ்.., டெனிஸ்.. என வாழ்ந்தவளுக்கு இரண்டு வருடங்களுக்கு முன் தான் நிவேதா அறிமுகமானாள். அதுவும் Gymnasiet இல் (உயர்தர பாடசாலை) சிந்து இரண்டாம் ஆண்டு மாணவியாக இருந்த போது நிவேதா முதலாண்டு மாணவியாக வந்து சேர்ந்தாள். பழைய மாணவர்களின் சில்மிஷங்களுக்குப் பயந்து பதுங்கித்திரியும் புதிய மாணவர்களின் கூட்டத்தில் நிவேதாவைக் கண்டதும் அவளும் ஒரு தமிழ்ப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டுமென அவள் நடை. உடை, பாவனையில் கண்டு கொண்டாள் சிந்து. நிவேதாவுடன் கதைக்க ஆசைப்பட்டாலும் பழக்க தோஷம் சிந்துவை விடவில்லை. முன் பின் அறிமுகமில்லாதவர்களுடன் உடனே சென்று பழகும் பழக்கம் சிந்துவுக்கு இல்லை. ஆகையால் சிந்துவும் நிவேதாவைப் பார்த்து விட்டு தெரியாதவள் போல் இருந்து விட்டாள்.

பாடசாலை தொடங்கி இரண்டு கிழமைகளுக்குப் பிறகு முதல் முறையாக பழைய புதிய மாணவர்களுக்கு சேர்த்து நடாத்தப்படும் காலைப் பொதுக்கூட்டம் திங்கட்கிழமை $10^{00}$ மணி இடைவேளையின் போது நடந்தது. அப்போது தான் சிந்துவுக்கும் அவள் வகுப்புத்தோழி மலினாவுக்கும் நிவேதாவின் பக்கத்தில் இருக்க இடம் கிடைத்தது.

மேடை மேலே அதிபர். புதிய மாணவர்களுக்கு வரவேற்பு நடாத்திக் கொண்டிருந்தார்.

"நீங்கள் தான் சிந்துஜா என நினைக்கிறேன்" மெதுவாக சிந்துவின் காதுகளில் கேட்டாள் நிவேதா. சிந்துவுக்கு வியப்பாகப் போய் விட்டது.

"நான் நிவேதா..." என தன் வலது கரத்தை நீட்டினாள். சிந்துவும் தன் வலது கரத்தால் அவள் கரத்தைப் பற்றிக் குலுக்கினாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிபர் உரை முடிந்து யார் யாரோ ஏதோ பேசினார்கள். சிந்துவுக்கு எதுவும் ஏறவில்லை. கடைக்கண்ணால் நிவேதாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சிந்துவும் நிவேதாவும் அடிக்கடி ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். கூட்டம் முடிந்து வெளியே வரும் போது மல்னா திடீரென காணாமல் போனதும், சிந்து தனியே நடந்து கன்டீனுக்குள் வந்து அமர்ந்தாள். அடுத்த பாடம் தொடங்குவதற்கு இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தது. இவள் பின்னாலேயே வந்த நிவேதா,

"நானும் உம்மோடு இருக்கட்டுமா?" என்று கேட்டாள்.

"Ja, Ja, det må du gerne" என்றாள் சிந்து.

இப்படித்தான் அன்று அவர்கள் நட்பு ஆரம்பமானது. அப்போதெல்லாம் சிந்துவுக்கு தமிழ் சுலபமாக வாயில் நுழையாது. நிவேதா கதைத்தால் சிந்து டெனிஷ் மொழியில் தான் கதைப்பாள்.

* * * *

**டென்**மார்க்கிலேயே உருவாகி பிறந்து வளர்ந்தவள் தான் சிந்து. அவள் குடும்பமும் ஆரம்பத்திலே மற்றைய தமிழர்கள் சூழ்ந்த இடத்தில் வாழ்ந்திருந்தாலும் காலத்தின் ஓட்டத்தாலும் சூழ்ந்திருந்த மனிதர்களின் மாற்றத்தினாலும் சிந்துவுக்கு உலகம் பிடிபடும் வயது வந்த போது. ஒரு ஒதுக்குப்புறமான கிராமத்திற்கு மாறிச் சென்று வாழத் தொடங்கினார்கள். ஆனால் சிந்து வளர்ந்து Gymnasium -

இப்போது
மாதமிருமுறை
கிடைக்கிறது....

சரிநிகர்

சரிநிகர்
SARINIHAR

உண்மை, நேர்மை
துணிவு, சுதந்திரம் -
இவற்றின் வெளிப்பாடாக வரும்
ஒரேயொரு தமிழ்ப் பத்திரிகை !

மாற்றுக் கருத்துக்களை
வெளியிடும்
ஒரேயொரு பத்திரிகை

இப்பத்திரிகையைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் சஞ்சீவி-யோடு தொடர்பு கொள்ளவும்.

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிவு செய்த போது அவள் மறுபடியும் அந்த மனிதர்கள் சூழ்ந்த நகரத்திற்குத் தான் வரவேண்டியதாகி விட்டது. கிராமத்திற்கு மாறிச் சென்ற நாளில் இருந்து நிவேதாவைச் சந்திக்கும் வரை தன் பெற்றோர்களின் கட்டளைப்படி உறவினர்கள், வீட்டிற்கு வரும் ஒரு சில பெற்றோர்களின் நண்பர்கள் அல்லாத வேறு எந்த தமிழர்களுடனும் பழகாமல், பேசாமல் வீதியில் கண்டால் சிரிக்காமல் போகப் பழகிக் கொண்டாள்.

நிவேதாவுடன் பழகிய இந்த இரண்டு வருடங்களில் சிந்து நிறையவே மாறியிருந்தாள். தமிழ் சுமுகமாகப் பேசப் பழகியிருந்தாள். நாளையும் கிழமையும் பற்றி பத்து வசனங்களைப் பத்து நிமிடங்களுள் எழுதி விடுவாள். இதற்கெல்லாம் காரணம் நிவேதாவும் அவள் அம்மா பானுமதி ரீச்சருமே. சிந்து, நிவேதா வீடு வரும் போதெல்லாம் பானுமதி அவளை இருத்தி வைத்து "சிந்து, நீர் தமிழ் பெண் உம்முடைய கலாச்சாரம் பண்பாடுகளை தெளிவாக அறிய வேண்டும் என்றால் தமிழ் மொழி தான் ஒரு சிறந்த ஊடகம். டெனிஸ் புத்தகங்களை வாசித்து மட்டும் தமிழரையோ அல்லது எங்கள் நாட்டைப் பற்றியோ விளங்கிக் கொள்ள முடியாது. தமிழரோட பழகி அவர்களோடு ஒருவராக வாழ்ந்து பார்த்துத்தான் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளலாம். உமக்கு உம்முடைய நாட்டைப்பற்றி உம்முடைய சமுதாயத்தைப் பற்றி, ஏன் உம்மைப் பற்றிக் கூட அறிய வேண்டுமென்றால் நீர் கட்டாயம் தமிழ் படிக்க வேண்டும். நிறையத் தேவையல்ல. புத்தகங்கள் வாசித்து விளங்கக் கூடிய அளவிற்கு, மற்றவர்கள் சொல்வதைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு, சம்பாஷணைகளில் பங்கு கொள்ளும் அளவிற்கு தேவை. உமக்கு விருப்பம் என்றால் சொல்லும் நான் உமக்கு இங்கு வரும் போது சொல்லித் தருகிறேன். அவ்வளவு தான் சிந்து தமிழ் படிக்கத் தயாராகி விட்டாள்.

பானுமதி ஒரு தமிழ் ஆசிரியை. ஆகவே தான் பொறுமையுடன், சிந்து கேட்கும் அசட்டுத்தனமான கேள்விகளையும், அவளையும் புரிந்து தமிழ் கற்றுக் கொடுக்கிறாள். சிந்துவும் குதிரை வேகத்தில் கட்டுரை வாசித்து விளங்கிக் கொள்ளுமளவிற்கு முன்னேறி விட்டாள். ஆனால் நிவேதா சிந்து வீட்டிற்குப் போவதில் சிந்துவுக்கும் அவள் பெற்றோருக்கும் வாக்கு வாதம்.

முதல் முறையாக நிவேதாவைப் பற்றி தன் தாய் அகிலாவுடன் கதைத்த போது அகிலா சிந்துவுக்குச் சொன்னது "நீ அவளுடன் அதிகம் பழகாதே" என்பது தான். ஆனால் சிந்து அதைக் கேட்டதாக இல்லை. சிந்து நிவேதாவை தன் வீட்டிற்கு அழைத்து வரும் போது சின்னதாக ஒரு எதிர்ப்பை அகிலா தெரிவித்தாலும் நிவேதாவுடன் அது அடங்கி விட்டது. காதலுக்குத் தான் பெற்றோர்களின் சம்மதம் வேண்டுமென்பார்கள். இங்கு சாதாரண நட்புக்குக் கூட பெற்றோர்களின் சம்மதம் தேவைப்பட்டது. சிந்து நிவேதா வீடு போய் தங்கி வருவது, நிவேதா சிந்து வீடு வந்து தங்கும் போது இப்படியாக


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டு வருடங்கள் ஓடிவிட்டது.

பாவாடை வேண்டும், சிமிக்கி வேண்டும் மயிர் மாட்டி வேண்டும், காலி சங்கிலி வேண்டும் இப்படியெல்லாம் கேட்கத் தொடங்கியிருக்கும் மகளைப் பார்க்கும் போது அளவற்ற சந்தோஷமாகத் தான் இருக்கிறது. ஆனால் மகள் ஜீன்ஸ் தான் போடுவாள், டெனிஸ் தான் கதைப்பாள், டெனிஸ் நண்பர்கள் தான் மகளுக்கு இருக்கிறது என்று கூறு வதில்தான் பெருமைப் படுகிறாள். இப்போது இரண்டு கலாச் சாரங்களிலும் ஆழப் பழகி வரும் மகளை கவனிக்கத் தவறிவிட்டாள். அதனால்த் தான் அவர்களுக்குள் வாக்கு வாதம்.

"ஏன், என்னுடைய வீட்டிற்குப் போகக் கூடாதென்று மறுபடியும் சண்டையா?
மௌனத்தைக் கலைப்பதற்காக கேட்கிறாள் நிவேதா.

முகத்தில் எதையோ தேடிக் கொண்டிருந்த அந்த ஜோடி இப்போ தம்மைச் சுற்றி இருந்தவர்களை மறந்து விட்டார்கள். அவர்களிடம் இருந்து தன் பார்வையைத் திருப்பிய சிந்து

"அதுக்கும் தான்" - என்றாள்.

"அதுக்கும் தான் என்றால் வேறு எதுக்கு?
ஆச்சரியமாக புருவத்தைச் சுருக்கி கேட்கிறாள் நிவேதா.

ஒரு நிமிடம் பதில் பேசாமல் இருந்த சிந்து தன் கண்கள் கலங்க "எனக்கு கல்யாணம் செய்யப் போகிறார்களாம்.... யாரோடு தெரியுமா? அவிலில் இருக்கிற நான் படங்களில் மட்டுமே பார்த்த என்னுடைய ஒரு மச்சானோடு."

"என்னடி புதுக் கதையாயிருக்கு" - நிவேதா.

"அதுதான் எனக்கும் தெரியேல்லை." - சிந்து.

"ஒரு வேளை உன்னையும் சரணையும் பற்றி கேள்விப் பட்டிருப்பினமோ."

"அதெப்படி! சரணும் நானும் பழகின விசயம் உன்னைத் தவிர வேறு யாருக்குமே தெரியாதே. அப்படியிருக்க எப்படி அம்மா அப்பாவுக்குத் தெரிய வரும்.

"ஏய் என்னைச் சந்தேகப்படாதே. எப்பவும் என் வாயிலிருந்து எந்த இரகசியமும் வெளியே போகாது. நித்திரையில் கதைக்காவிட்டாலும் அப்படியே கதைத்தாலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாருக்கும் கேட்காது. என் அறையில் யாரும் இரவில் என்னுடன் படுப்பதில்லை, உன்னைத் தவிர. அதுவும் மாசத்தில் ஒரு முறைதான் நீ வருவாய்" என்ற நிவேதா ஒரு வினாடி பேசாமல் இருந்து விட்டு,

"ஒரு வேளை சரண் தான் யாருக்காவது சொல்லி அது அப்படியே உன் அப்பா அம்மா காதுக்கு எட்டியிருக்குமோ..?"

"ஒருகாலும் இருக்காது நிவே. வெளியே சொல்லமாட்டேன் என எனக்கு சரண் சத்தியம் பண்ணியிருக்கிறார். ஆனால், ஒரு வே-ளை அன்று நடந்த சம்பவத்திற்கு பிறகு நமக்குள் ஏற்பட்டிருக்கும் இந்த இடைவெளியை எண்ணி, என் மேல் கோபப்பட்டு யாருக்காவது சொல்லி அது அப்படியே அம்மா, அப்பா காதுக்கு வந்திருக்குமோ...." பட பட வென சொன்னவள் நிற்பாட்டி,

"இல்லை அப்படியிருக்காது. எனக்கு சரண் மேல் நம்பிக்கை இருக்கு."

"இல்லை சிந்து உனக்கு சரணை இப்ப கொஞ்ச நாட்களாகத்தான் தெரியும். ஆனா எனக்கு நிறைய தெரிஞ்ச நாளாத் தெரியும். அவர் என் மாமா. என்னுடைய அம்மாவே தன் சொ-ந்தத் தம்பியை நம்புவதில்லை. அப்படியிருக்க நீ அவரை நம்புறது ஆச்சரியமாய் இருக்கிறது."

"இதில் எந்த ஆச்சரியமும் இல்ல. உன் அம்மாவைப் பொறுத்த வரையில் சரண் குடித்தால் குற்றம், பெண்களோடு கதைத்தால் குற்றம். ஆனால் எனக்கு அதெல்லாம் குற்றமாகத் தெரியவில்லையே. ஆயிரம் பெண்களோடு சரண் சிரித்துக்-கதைத்தாலும் எனக்கு மட்டும் அவர் தன்னிடம் கொடுத்திருக்கிறார். என்னைப் பொறுத்தவரை சரண் நல்லவர். நான் அவரை நம்புறன். அவருடைய கடந்த காலம் எப்படி இருந்ததோ அது எனக்கு அவசியமில்லாத விசயம். சரணும் நானும் ஒருத்தரை -ஒருத்தர் விரும்புகிறோம் தான். ஆனால் என்னுடைய சம்மதமில்லாமல் ஒரு நாளும் சரண் என்னிடம் நெருங்கினதில்லை. அன்று அவர் நிறைக் குடித்திருந்தார். அதனால் தான் அவர் அன்று அப்படி நடந்து கொண்டார். என்னைக் கண்டதும் தன்னை விரும்புகிறவள் தானே என தன் விருப்பத்தைச் சொன்னவர், நான் அதற்கு சம்மதிக்கவில்லை. ஆகையால் தன் பலத்தால் முயற்சித்தார். அப்போ நானும் ஆவேசப்பட்டு அவரை உதறி விட்டு வந்து விட்டேன். அதன் விளைவு நமக்குள் இப்போ ஒரு இடைவெளி...."

"... ஆனால் சரண் அன்றைக்கு அப்படி நடந்தபடியால் தான் என் மனதில் இவ்வளவு நாளும் இருந்த ஒரு தடுமாற்றத்திற்கு விடை கிடைத்தது."

"அப்படி என்ன தடுமாற்றம்." இடையில் அவசரப்படுகிறாள் நிவேதா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"உனக்குத் தெரியும் தானே நிவேதா, நான் இவ்வளவு நாளும் பள்ளிக் கூடம், வீடு, என் அறை. என் நண்பர் கூட்டம் இப்படித்தான் வாழ்ந்தேன். அப்போ எனக்கு எந்தக் கவலையுமில்லை. நண்பர்களோடு சேர்ந்து சினிமா போவது, வெளியில் சுற்றுவது இப்படி நிறைய.... நான் என் விருப்பப்படி தான் வாழ்ந்தேன். என்னை யாரும் வித்தியாசமாகப் பார்த்ததில்லை. அப்படியே பார்த்தாலும் எனக்கு அது பொருட்டாக இருந்ததில்லை. நான் வித்தியாசமான நிறம் தான் ஆனால் என் நண்பர்கள் கூட்டத்திற்கு அது ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. அதுக்குக் காரணம், சின்ன வயதில் இருந்தே அவர்களோடு படித்துப் பழகி அவர்களோடு நானும் ஒருத்தியாக இருந்ததாலும் இருக்கலாம். ஆனால், தமிழர்களோடு பழகிய போது மட்டும் என்னில் ஒரு வித்தியாசத்தை உணர முடிந்தது. அதிகமாக கதைக்க முடியவில்லை. சுமுகமாகப் பழக முடியவில்லை. ஏதோ எனக்கும் தமிழ் சமுதாயத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லாதது போல் ஒரு உணர்வு. ஒரு வேளை அதற்குக் காரணம் என்னுடைய அம்மா அப்பாவாக இருக்கலாம். சின்ன வயதில் இருந்தே தமிழரைப் பற்றி என்னுடைய மனதில் ஒரு தப்பான எண்ணத்தை செலுத்திவிட்டார்கள். என் பார்வைக்கும் தமிழர் புதுமையாகத்தான் இருந்தார்கள். ஓரளவு தமிழ் கலாச்சாரம் எனக்குத் தெரிந்தாலும் உன் வீட்டிற்கு வரத் தொடங்கின பிறகு தான் அதை நேரில் பார்க்க முடிந்தது. உன் வீட்டில் சந்தித்த தமிழர்கள் எல்லாம் நான் இவ்வளவு நாளும் பழகியவர்கள் போல் இருக்கவில்லை. தேவையில்லாமல் ஆண்கள் பெண்களோடு கதைக்க மாட்டார்கள், பெண்கள் ஆண்களோடு கதைக்க மாட்டார்கள். இப்படியே இன்னும் நிறைய. ஆனால் சரண் இவர்கள் எல்லோரும் பார்க்க நிறைய வித்தியாசமாக சாதாரணமாக இருந்தார். அவரோடு எனக்கும் சாதாரணமாக பழக முடிந்தது பிறகு அந்த சாதாரண பழக்கமே காதலாச்சு. அப்போ என்னையே கேட்டுப் பார்ப்பேன் நான் எந்த சமுதாயத்திற்கு சம்பந்தமுள்ளவள் என. டெனிஸ் சமுதாயத்திலும் நிறைய பிடித்திருந்தது. தமிழ் சமுதாயத்திலும் நிறைய பிடித்திருந்தது. நீ முதலில் சொன்னாயே அது போல இரண்டு தோணிகளில் தான் கால் வைத்துப் பயணம் செய்தேன்.....

.... அன்று நடந்த சம்பவத்திற்குப் பிறகு எனக்கும் தமிழ் சமுதாயத்திற்கும் தான் நிறைய சம்பந்தமே உள்ளது என்று கண்டு பிடித்தேன். அதுக்குக் காரணம் சரண் தான். நான் தமிழ்ப் பெண் தான். அன்றைக்கு சரண் தவறாக என்னை பாவிக்க முயற்சித்த போது நான் மறுப்புத் தெரிவித்தேனே அதுக்குக் காரணம் என்ன தெரியுமா நிவே? இந்த வயதில் இப்படியான உறவுக்கு நான் இப்போ இடங்கொடுக்கக் கூடாது. அதோடு எல்லோரும் ஏற்றுக் கொள்கிற மாதிரி சரணுக்கும் எனக்கும் ஒரு உறவு முதலில் வேண்டும். இதைத் தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை. இதுவே இந்த நாட்டு சராசரி பெண்ணாக இருந்திருந்தால் தான் விரும்பியவன் அணைக்கும் போது நிச்சயமாக தடைவிதித்திருக்க மாட்டாள். ஆனால் அப்படி நடக்க என்னால் முடியவில்லையே சரண் மேல் வைத்தியமாக இருந்தும்."

www.tamilarangam.net

மூச்சு விடாமல் கூறிக் கொண்டு போகும் சிந்துவை ஆச்சரிய மாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் நிவேதா.

"ஆனால் அதற்காக தமிழ்ச் சமுதாய பழக்க வழக்கத்தை முழுமை யாக என்னால் ஏற்க முடியாது. தமிழ் சமுதாயத்திற்கும் நிறை ய மாற்றங்கள் தேவைதான். அதனாலதான் நானே எனக்காக ஒரு தோணியை உருவாக்கி இப்படித்தான் பயணம் செய்ய வேண்டும் என செய்கிறேன். சரணும் எனக்கேற்ற துணையாய் கடை சி வரைக்கும் வரவேண்டும் என விரும்புகிறேன்." "உனக்கு ஒன்- று தெரியுமா நிவே?"

"என்ன?"

"நான் ஒரு அதிஷ்டசாலி. இல்லாட்டி நீ எனக்கு நண்பியாக கிடை த்திருப்பாயா? இந்த விசயங்கள் எல்லாம் உன்னோடுதான் என்னா ல் கதைக்க முடிகிறது. அம்மா அப்பாவோடு கதைப்பதெல்லாம் சாப் பாட்டைப் பற்றியும், உடுப்பைப் பற்றியும், படிப்பைப் பற்றியும் தான். அவர்களைப் பொறுத்தவரையில் மகள் சந்தோஷமாக இருக்கி- றாள் சாப்பாடு, உடுப்பு, படிப்போடு.

-எங்கோ ஆரம்பித்து எங்கோ முடிக்கிறாள் சிந்து. நிவேதாவுக்கு இலேசாகக் கண்கள் கலங்கிப் பார்க்கிறது. இருந்தாலும் தன் னைச் சமாளித்தபடி,

"நீ எனக்கு நண்பியாக கிடைத்தது நானும் செய்த அதிஷ்டம் தான் சிந்து. ஒன்று மட்டும் நீ விரும்பும் வாழ்க்கை நிச்சயமாக உனக்கு கிடைக்கும் சரணை உன் வழிக்கு மாற்றினால்," கூறியவாறு கையில் கட்டியிருந்த கடிகாரத்தைப் பார்க்கிறாள் நிவேதா.

-அவர்களைச் சுற்றியிருந்தவர்கள் தத்தம் தோள்ப்பைகளைத் தூக் கிக் கொண்டு அடுத்த பாடத்திற்குச் செல்ல தயாராகிக் கொண் டிருக்கிறார்கள். நிவேதாவும் தன் தோள்ப்பையை தயாராக எடுத்த வண்ணம்,

"அம்மா, அப்பா, கல்யாணப் பேச்சு இதையெல்லாம் எப்படி சமாளிக்கப் போகிறாய்?"

-சிறிது நேரம் யோசித்த சிந்து,

"எங்கள் சமுதாயத்தில் எல்லா அப்பா, அம்மாக்களுக்கும் பிள்ளைகள் காதலித்தால் அது கொலைக் குற்றத்திற்குரிய செயல். என் அம்மா அப்பாவும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் தமிழ் சினிமாவில் வருகிற மாதிரி வீட்டினுள் அடைத்து வைக்க அல்லது ஊரை விட்டு ஊர் கடத்தவோ இடம் கொடுக்க மாட்டேன். என்னுடைய உணர்வு களுக்கு மதிப்புக் கொடுத்தால் நிச்சயமாக அவர்களுக்கு ஏற்ற


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மகளாயும் என்னால் வாழ முடியும். அப்படி இல்லை, 'நீ சின்னப் பிள்ளை அனுபவம் பத்தாது நாங்கள் சொல்லுகிற மாதிரித் தான் வாழ வேணும்' என்று சொல்வார்களானால், சரி, அதுக்கும் சம்மதித்து அவர்களுக்குக் கட்டுப்பட்டு வாழுவேன். காரணம் என்னை பாதுகாக்க வேண்டியது அவர்களோட உரிமை. அதுக்கு கட்டுப்படுவது என்னோட கடமை. ஆனால் அதுவும் இன்னும் ஒரு வருஷம் தான். அதுக்குப் பிறகு எனக்கு 18 வயது ஆகி விடும். அதற்குப் பிறகும் நிச்சயமாக அவர்களுக்கு என்னிடம் உரிமையிருக்கு. அதே நேரம் எனக்கும் உரிமையிருக்கு எனக்கு விரும்பின வாழ்க்கையைத் தேட அது நல்லதோ கெட்டதோ, அம்மா, அப்பா சம்மதத் தோடயோ இல்லை அவர்கள் சம்மதம் இல்லாமலேயோ."

"என்னவோ சிந்து நீ சொல்லுகிறது எதுவுமே எனக்குப் புரியயில்லை. சில நேரத்தில் நீ அதிகமாக எதிர்காலத்தைப் பற்றி கற்பனை பண்ணுகிறாய். ஒரு வருஷத்திற்கு காத்திருக்கப் போவதாக சொல்லுகிறாய் அது எதுக்கும் நல்லது தான். நல்லாய் யோசி யோசித்து ஒரு முடிவெடு. ஒரு வருஷத்திற்குள் நிறைய மாற்றங்கள் வரலாம். ஏன் உன்னுடைய அம்மா அப்பா கூடச் சம்மதம் தரலாம். இல்லாட்டி நீயும் சரணும் ஒருத்தரை ஒருத்தர் இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். ஒரு வேளை நீயோ சரணோ ஒருவரை விட்டு ஒருவர் பிரியலாம்...எது எப்படியோ. இப்போதைக்கு எப்படி சரணை சமாளிக்கப் போகிறாய்?"

"இந்த ஒரு கிழமை 'இடைவேளை' போதும் என்று நினைக்கிறேன். நாளைக்குப் Sports klubக்கு சரண் வருவார், அப்போது கதைக்கப் போகிறேன். போனதடவை வந்தபோது என்னிடம் மன்னிப்புக் கேட்டார் ஆனால் நான் கேட்காதவள் போலச் இருந்துவிட்டேன். அவர் பார்வையே சொல்லியது தன் தவறை உணர்ந்து விட்டேன் என."

அவர்களைச் சுற்றியிருந்தவர்கள் இப்போ நிறையக் குறைந்திருந்தார் கள்.

"சரி எழும்பு சிந்து. நாங்கள் 10 நிமிஷம் பிந்தி பாடத்திற்குப் போகிறோம். எனக்கு டெனிஸ், உனக்கு மறுபடியும் கணிதம் தானே?"

"ம்... ஆனால் நான் இந்தப் பாடத்திற்குப் போகாமல் கள்ளம் பண்ணப் போகிறேன். நீ போ நிவே."

நிவே போய் விட்டாள். தன்னைச் சுற்றிப் பார்க்கிறாள் சிந்து. இடைவேளையின் போது முட்டி வழிந்த கன்ரீன் இப்போ ஆங்காங்கு சில பேருடன் வெறுமையாகக் காணப்படுகிறது. சிந்து தன் புத்தகப் பைக்குள் இருந்து ஏதோ ஒரு புத்தகத்தை வெளியே எடுக்கிறாள். பின்பு அதை வாசிப்பது போல் பாசாங்கு செய்து கொண்டே தான் சரணைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்தித்த பழைய நினைவுகளை மீட்டிப்பார்க்கிறாள்
எங்கோ ஒரு சிற்றிலில் வாழ்ந்து வந்த நிவேதாவின் மாமன் சரணை நிவேதாவின் பிறந்த நாளன்று முதல் முறையாக சந்தித்தது... பிறகு பழகியது... சரண் நிவேதா வீடு மாறி வந்தது.... Sports klub ல் அடிக்கடி சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது.... நண்பர்களானது... நட்புடன் மட்டுமே நிற்காமல் காதலானது......

-முற்றும்- -லாயா-

---

(19ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

மாறாக நடப்பதுடன் எமது சந்தர்ப்பவாத நிலைப்பாட்டையும் நாம் கடைப்பிடிப்பவர்களாகக் கணிக்கப்படுவோம்.

இன்று இதற்கான விவாதங்கள் ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் நிகழ்வதால் எங்களுக்கு அது தொடர்பான அரசியல் தீர்மானம் கிடைக்கப்பெற்றது. அதை வாசகர்களாகிய உங்கள் பகுதியில் வெளியிட்டு விமர்சிக்கக் கோருகின்றோம்.

இந்த அரசியல் தீர்மானத்தை, சஞ்சீவி ஆசிரியர் குழு மட்டும் விமர்சித்து ஏற்றுக்கொள்வது என்பது வாசகர்களாகிய உங்களிடம் இருந்து நாம் தனிமைப்பட்டு ஒரு தன்னியல்பான செயற்பாடாகவே செயற்பட முடியும். ஆகவே உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவை தவிர இந்த 25 மலர்கள் கொண்டுவந்த கால இடைவெளியில் சிறுவர்மலர்கள், அஞ்சல் நூலகம், தேசிய இனப்பிரச்சனை தொடர்பான கட்டுரை (திருப்பிரதியில் வெளியானது) என்பவற்றையும் நாம் வெளியிட்டு வந்துள்ளோம்.

சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்த டென்மார்க்கில் வாழும் நாம் சஞ்சீவியை கையெழுத்துப் பிரதியாகவே வெளியிட்டுக் கொண்டிருக்கின்றோம். இந் நிலைமையினை மாற்றி சஞ்சீவியை கணனிமேல் (Computer) பதித்து வெளியிடும்படி சில வாசக நண்பர்கள் கேட்டுக் கொண்டதுடன், பண உதவி தந்து உதவ முன் வந்துள்ளார்கள். இது எமக்கு மிகவும் உற்சாகமூட்டுகின்றது. நாமும் இது சார்பாக பலதடவை எழுதிவந்துள்ளோம். இது போன்று, சகல வாசக நண்பர்களும் முன்வந்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

- சஞ்சீவி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கம்யூனிசத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டதா?

தங்கருபன்

"வர்க்கப் போராட்டத்தைக் கைவிட வேண்டும், சமாதானமாக சோசலிசத்திற்கு மாற வேண்டும்" என்று கூறி சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கு துரோகமிழைத்தும் "பாராளுமன்றத் தேர்தலில் பங்குபற்றி ஆட்சியை பிடிக்க வேண்டும்" என்றும் முதலாளித்துவத்துடன் சமரசமாகிப் போன போலிக் கம்யூனிஸ்ட்டுக்களை முதலாளித்துவ வாதிகள் ஏற்றுக் கொண்டார்களா?

ஒரு போதும் இல்லை!

1964ல் ஈராக்கிலும், 1965ல் இந்தோனேசியாவிலும், 1973ல் சிலி நாட்டிலும் நடைபெற்ற தேர்தல்களில் போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு நிச்சிய வாய்ப்புக்கள் கிட்டின. இருந்தும் அவர்களால் ஆட்சியமைக்க முடியவில்லை. ஏனெனில், இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கள் மூலம் சகல போலிகம்யூனிஸ்டுக்கள் தூக்கியெறியப்பட்டனர். உண்மையில் தேர்தலில் தான் போலிகள் வென்றார்கள். எனினும் அவர்களால் அரசமைக்க முடியாமற் போயிற்று. காரணம், உழைக்கும் மக்களைச் சாராமலும், ஆயுதப் போராட்டத்தை ஒழுங்கமைக்காமையுமே ஆகும். சமாதான மாற்றம், பாராளுமன்றத்தால் முதலாளித்துவத்தை ஒழித்துவிட முடியாது என்பதையே இது உறுதிசெய்தது.

இன்று நடந்து முடிந்த சம்பவங்களுக்கு, நேற்றுவரை ரஷ்யாவிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் "சோசலிசம் பூத்துக்குலுங்குகிறது" என்றவர்கள் எவ்வித விமர்சனமும் இன்றி ஓடி ஒழிந்து கொண்டார்கள். தங்கள் பெயர்களுக்கு முன்னால் பேராசிரியர்கள், இலக்கியவாதிகள் போன்ற பட்டங்களைச் சூட்டிக் கொண்டுள்ள ரஷ்ய ஆதரவு பிழைப்பு வாதிகள் இச் சம்பவங்களுக்கு இன்றும் சரியான காரணங்கள் கூறவில்லை. பொதுவாக எல்லோரும் இணைவோம் என்கிறார்கள் இந்த வெட்கங்கெட்டதுகள்.

ரஷ்ய, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சியால் உலகில் தனி வல்லரசாக அமெரிக்கா உருவாகியுள்ளது. ஈராக் ஆக்கிரமிப்பு யுத்தத்தின் பின் தனது 'புதிய உலக ஒழுங்கை' நிலை நாட்டத்துடிக்கிறது. "மேற்கத்திய ஜனநாயகம் வென்றது", "கம்யூனிசம் தோற்றது". என்று தம்பட்டமடிக்கும் அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஜனநாயகத்திற்குத் தருகிற மரியாதையைப் பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகில் ராணுவ ஆட்சிகள் கொடுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. எங்கு ராணுவ ஆட்சி நடை பெறுகிறதோ, அங்கு, கொடிய அடக்குமுறைகள், பஞ்சம், மனித உரிமை மீறல்கள் சர்வசாதாரணமாக நடக்கும் என்பது நாம் சாதாரணமாக அறிகின்ற செய்திகள். உலகிலுள்ள ராணுவ காட்டுமிராண்டி அரசுகளையும் ஆதரித்து உதவியளித்து வருவது அமெரிக்காவும் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளும் தான். உலகில் காலாவதியாகிப் போன, ஜனநாயகத்திற்கு முரணான மன்னர் ஆட்சிகளையும், அரச பரம்பரையினரையும் ஆதரித்து, மக்கள் வரிப் பணத்தில் அவர்கள் சுகபோகத்தை அனுபவித்து வாழ்வதையும் அங்கீகரிப்பது கேடுகெட்ட முதலாளித்துவ நாடுகள் தான்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஈராக்கில் படையெடுத்தோம் என்றார்கள். இவர்கள் உண்மையில் ஜனநாயகத்திற்காக ஒரு போதும் குரல் கொடுப்பதில்லை என்பதை பல சான்றுகள் கூற முடியும். ஒரு சில உதாரணங்களைப் பார்ப்போம்.

* சவூதி அரேபியாவில் பெண்களுக்கு பர்தா (கறுப்பு முக்காடு) தவிர எவ்வித உரிமையும் கிடையாது. ஜனநாயக விரோத மன்னராட்சியை கொண்டுள்ள சர்வாதிகார நாடு என்பது தெரிந்தும் ஈராக் போரின்போது அமெரிக்கா சவூதி அரேபியாவை தனது சுயநலத்திற்காக பாதுகாப்பளித்தது
* தென் ஆபிரிக்கா பெரும்பான்மை கறுப்பின மக்களை, சிறுபான்மை இன வெள்ளையர்கள் சர்வாதிகாரமான ஆட்சி மூலம் அவர்களது உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கின்றனர். வெள்ளை இனவெறியர்களின் பேயாட்சியை அமெரிக்கா ஆதரிக்கக் காரணம் வெள்ளை இனவெறி தானே. இல்லையேல் அங்கும் தனது அடியாளான ஐக்கிய நாடுகள் சபையுடன் ராணுவத்தை அனுப்பி ஜனநாயகத்தை ஏன் காக்கவில்லை
* இஸ்ரேல், பலஸ்தீனிய மக்களை நரவேட்டையாடுவதை கண்டும் காணாமல் இருப்பதுடன், தொடர்ந்தும் ஆயுதங்களை வழங்கிக் கொண்டே வருவ ஏன்?
* காலஞ்சென்ற ஈரானின் மன்னன் ஷா ஈரானிய மக்களைக் கேட்பாரற்று அமெரிக்கா சுரண்ட அனுமதித்தான். அவர் ஒரு சர்வாதிகாரி என்று தெரிந்தும் அமெரிக்கா ஆதரித்தது தானே!
* நீண்ட காலமாக சிலி நாட்டை ஆண்ட ராணுவ சர்வாதிகாரி பினாசே இரண்டு தசாப்தங்கள் மனித உரிமை மீறல்களில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆட்சியை நடாத்தினான். பனாமாவில் ராணுவத்தை அனுப்பி 10,000 பேருக்கு அதிகமான மக்களைக் கொலை செய்து சர்வாதிகாரி நொரிகா வைப் போல ஏன் பினாசெட்டை பிடிக்கவில்லை? ஏனெனில் நொரிகா CIA ஏஜண்டாக இருந்து, பின் முரண்பட்டவன் என்பதாலேயே, அநியாயமான போரால் 10,000 மக்கள் மாண்டார்கள். ஆனால் பினாசெட் இன்னும் எவ்வித தண்டனையுமில்லாமல் தப்பியுள்ளான்.
* இதே போல பர்மா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஹைட்டி, பேரு, பனாமா, ஈராக், வெனிசுவேலா போன்ற நாடுகளின் சர்வாதிகார ஆட்சிகளுக்கு ஆதரவாக இருந்து, வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

www.tamilarangam.net

* ஈராக்கின் சர்வாதிகாரி சதாம்குசேனை, ஈரான்- ஈராக் போரின் போது அமெரிக்கா, (சதாண்டம்) ஈரானுக்கு எதிராக ஆதரித்தது. ஏனெனில் அப்போதைய கொய்மேனி ஆட்சி அமெரிக்காவையும், ரஷ்யாவையும் தனது எதிரியாகக் கருதியது. ஈரானுக்கு எதிராக சகல விதமான



**ஈராக்கிய கைதிகள்**

சதாம்குசைனுடன் போர் என்ற போர்வையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

அமெரிக்காவின் முன்னை நாள் நீதி அமைச்சர் ராம்சே கிளார்க் (RAMSEY CLARKS) என்பவர் அமெரிக்க அரசைத் தண்டிக்கக் கோரி வழக்குத் தொடுத்துள்ளார். இவர், GEORGE BUSH, DICK CHENEY, DAN QUAYLE, JAMES BAKER, WILLIAM WEBSTER, COLLIN POWELL, NORMAN SCHWARZKOPF போன்ற முக்கிய நபர்களை **போர்க்கிரிமினல்**" குற்றம் சாட்டி வழக்கு தொடுத்துள்ளார். திட்டமிட்டு ஈராக் பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகளில் குண்டு வீசி, நாசம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டியுள்ளார் ராம்சே கிளார்க்ஸ். (RAMSEY CLARKS).

உதவிகளையும் ஈராக் சர்வாதிகாரி சதாமுக்கு அமெரிக்கா வழங்கியது. தனது நலன்களுக்கு கேடு விளைவித்ததுமே ஈராக் மீது படையெடுத்து ஆக்கிரமிப்பு செய்தது அமெரிக்கா.

மேற்கு நாடுகளும், அமெரிக்காவும் வலியுறுத்தும் பாராளுமன்ற முறை நெருக்கடிகளுக்குள்ளாகும் போது இராணுவ ஆட்சிகளை அரங்கேறுகின்றன.

இப்படி ஜனநாயகத்திற்கு விரோதமான அரசுகளுக்கு தாராள உதவியளித்துக் கொண்டே 'ஜனநாயகம்', 'சமாதானம்' பற்றிக் கூச்சலிடுகின்றனர்.

www.tamilarangam.net

உலகெங்குமுள்ள ராணுவ ஆட்சிகளை ஆதரிப்பதும், புரட்சிகர இயக்கங்களையும், உரிமைகளுக்காகப் போராடும் அமைப்புகளையும் ஒடுக்குகின்றன ஏகாதிபத்தியங்கள். மக்களைச் சீரழிக்கும் வழிகளைச் 'சுதந்திரம்" என்ற பெயரில் அறிமுகத்தி, சீரழிந்த சமுதாயத்தை உலகெங்கும் உருவாக்கி, அதன் மூலம் தாம் நினைத்தவற்றை சாதிப்பதும் ஏகாதிபத்தியங்கள் கைக் கொள்ளும் உத்திகளாகும். அதற்கு மக்களின் அறியாமையை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றன.

வறியநாடுகளில் 'உதவி' என்ற பெயரில் ஊடுருவி தங்களது நலன்களைப் பேணல், தங்களது நலன்களுக்கு எதிராக உள்ள நாடுகள் மீது பொருளாதாரத்தடைகளை விதித்தல்; தருணம் வரும் போது தமது அடிவருடிகளின் மூலம் பொய்மையாட்சிகளை (தமக்கு வேண்டிய ராணுவ அதிகாரிகள் மூலம்) அரங்கேற்றுதல், இவை எல்லாவற்றையும் விட கலாச்சாரத் தளத்தில் தங்களது (ஏகாபத்திய) கருத்துக்களை நியாயப்படுத்த செய்தி தொடர்புச் சாதனங்களைத் தமது கண்காணிப்பில் வைத்து வருகின்றது. CNN, MTV வகையறாக்களை உலகெங்கும் ஒளிபரப்புவது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மூன்றும் உலக நாடுகளின் புரட்சி இயக்கங்களுக்கு எதிராக செய்தித் தொடர்பு சாதனங்கள் பாவிக்கப்பட்டமைக்கு நிக்கராகுவா, அங்கோலா, மொசாம்பிக், கியூபா போன்ற நாடுகளை உதாரணம் கூறலாம். நிகாரகுவா எதிர்புரட்சிப்படையான CONTRA, அங்கோலாவின் UNITA, மொசாம்பிக் MNR போன்ற எதிராகக்கிளம்பல்களை ஆதரித்தமை குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் ஐரோப்பிய நாடுகளில் ஒளிபரப்பட்ட CIA பற்றிய தொகுப்பு, வியட்னாமில் அமெரிக்கர் செய்த அட்டூழியங்கள் பற்றியும், கொலைகாரப் படையான CIA யின் முன்னைநாள் உறுப்பினர்களின் பேட்டியும் காட்டப்பட்டன. இவர்களில் பெரும்பான்மையானவர்கள், தங்களை வாழ்க்கைப் பெருமதியற்றவர்கள் என்பதை வெளிக்காட்டினர். பலர், தாம் செய்த கொலைகளை நியாயப்படுத்தினர். 'கம்யூனிசத்திற்கு' எதிராகச் செயற்பட்டதையும் பெருமையாகக் கூறினார்கள்.

இவர்களுக்கு கம்யூனிசம் பற்றிய தெளிவான வரையறை இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தோனேசியாவில் பல லட்சம் மக்கள் 'கம்யூனிச ஆதரவாளர்கள் அல்ல' என்று தெரிந்தும் கொல்லப்பட்டனர் என மனச்சாட்சி உறுத்துகின்ற பழைய CIA உளவாளிகள் கூறினர். இச் செய்தித் தொகுப்பில் CIA யின் நம்பிக்கைக்குரிய உளவாளிகளின் பேட்டி நீண்ட நேரமும், விரக்தியுற்ற உளவாளின் பேட்டி குறுகிய நேரமும் காட்டப்பட்டது. (முன்னாள் CIA உளவாளியான ரால்ப் மாகிகி (RALPH MCGIE HEE) என்பவர் CIA உலகெங்கும் நடாத்திய நாசகார, கிரிமினல் குற்றங்களை பற்றிய விபரங்களை தொகுத்துள்ளார். ஆனால், இவரைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடத, TV செய்தித் தொகுப்பில் குறிப்பிடப்படவில்லை). ஆனால் உத்தியோகபூர்வ CIA அதிகாரிகள், CIA யை விமர்சிக்கும் முன்னாள் உளவாளி அதிகாரிகளை விட பற்றியாக எதிர்க்கின்றனர். (முன்னைநாள் CIA உளவாளி ஒன்று

www.tamilarangam.net

சில வாக்கு மூலங்கள்:

* ரால்ப் மாகிகீ (RALPH McGEHEE): OPERATION PHOENIX ஒரு யுத்த கிரிமினல் நடவடிக்கையாகும், ஆனால் அதை நடாத்தியவர்கள் யுத்த கிரிமினல் என தண்டிக்கப்படவில்லை.
* ஜோசியா சீ (YOSHIA CHEE): நாங்கள் தான் பயங்கரவாதிகளாக இருந்தோம், பயங்கரவாத எதிர்ப்பாளர்களாகவல்ல.
* பிராங் ஸ்நெப் (FRANK SNEPP): PHOENIX ஒரு படுகொலை திட்டமாகும்.
* ஜோன் ஸ்ரொக்வெல் (JOHN STOCKWELL): CIA, சித்திரவதை செய்வதை பொறுமையாக செய்தது. எத்தனை பேர் கைது செய்யப்பட வேண்டும் என்பதையும், எத்தனை பேர் கொலை செய்யப்பட வேண்டும் என்பதையும் திட்டமிட்டுச் செய்து முடித்தது.

* OPERATION PHOENIX என்பது CIA வியட்னாம் போரின் போது இயக்கிய கொலைகார அமைப்பாகும்* இச் செய்தித் தொகுப்பில் அமெரிக்கா வியட்னாமை ஆக்கிரமிக்கவில்லை என்பது போலவும் "அது உள்நாட்டு (வட-தெற்கு) போர் என்பது போன்ற மாயையை காட்டியது.

ஈரான் பற்றிய செய்தித் தொகுப்பில் 1953ம் ஆண்டு ஆட்சிக்கவிழ்ப்பிற்கு (மன்னன் ஷாவிற்கு) ஆதரவளித்ததையும், பல கோடி டொலரை வழங்கியதையும், அதற்குப் பரிகாரமாக மன்னன் ஷா "ஈரானில், தனது அதிகாரம் பறிபோகும் நிலை வருமாயின் CIA யை அரச அதிகாரத்தை தமது கையில் எடுக்கவும் அனுமதியளித்தார்" எனவும் முன்னைநாள் CIA உளவாளி வாக்குமூலம் அளித்தார்.



வியட்னாம் போர்: நாகரிக மக்கள் வெட்கித் தலைகுனிந்த யுத்தம். மனித இனத்திற்கு அவமானம் தேடித்தந்த யுத்தம்: இரண்டாம் உலகப் போரில் பாவிக்கப்பட்ட குண்டுகளைப் போல பல மடங்கு அமெரிக்கா வியட்னாமில் போட்டது. ஆயுத பலத்தால் மக்கள் யுத்தத்தை அழித்துவிட கனவு கண்ட அயோக்கியர்களை அடித்து விரட்டினர் வீரமிக்க வியட்னாமிய மக்கள். ஆக்கிரமிப்பாளர்கள் வீசிய குண்டுகளினால் இன்றும் குழந்தைகள் குறைபாடுகளுடன் பிறக்கின்றனர்.
அமெரிக்க ஆக்கிரமிப்பால் 6 லட்சம் மக்கள் கொலை செய்யப்பட்டனர். 30 லட்சம் பேர்கள் ஊனமாக்கப்பட்டனர். 90 லட்சம் பேர்கள் அகதிகளாக்கப்பட்டனர். 50 லட்சம் ஏக்கர் நிலம் வீசப்பட்ட குண்டுகளால் பயிர்கள் உயிரினங்கள் வாழ முடியாதவை ஆக்கப்பட்டது.

தொடரும்....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(௨ம் பக்கத் தொடர்)

ஆளுமையையும், 'சகிப்புத்தன்மை'யையும் அளவிடும் அளவு கோலாகிறது. ''எண்சீர் விருத்தம் பாடுவதற்காக நான் சினிமாவுக்கு வரவில்லை'' என்ற வாலியின் 'பிரகடனம்'தான் இதன் பாதாளம் - ஆழம்.

அதே நேரத்தில், இந்தக் 'குப்பைகளில்' விழுந்து புரளாமல், மியூசிக் அகாதமியிலும் திருவையாற்றிலும் கச்சேரி நடத்திக் கொண்டிருந்திருப்பாரானால், சத்தியமாக ராஜா சிம்பனி அமைத்திருக்க முடியாது. ஏனெனில் சினிமா - கோணல் மாணலாக வாவது - மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கிறது. தூய கலையோ தந்தக் கோபுரத்திலிருந்தபடியே குப்பையை சபித்துக் கொண்டிருக்கிறது. கோடம்பாக்கம் இகலோகத்திலேயே 'போகாத ஊருக்கு' வழிகாட்டுகிறது; நுங்கம்பாக்கமோ - சங்கீத வித்வ சபை - பரலோகத்திற்கு 'இல்லாத ஊருக்கு' வழிகாட்டுகிறது. ஈயத்தைப் பார்த்து பித்தளை இளிக்கக்கூடாது.

இசைதான் சூக்குமமேயொழிய இளையராஜாவின் உலகக் கண்ணோட்டம் 'பூதக் கண்ணாடி' வைத்து கண்டுபிடிக்குமளவு சூக்குமமானதல்ல; அவர் பெரிதும் விரும்புகின்ற ஐரோப்பிய இசைமேதை பாக்கைப் போலவே ராஜாவிடமும் ஆன்மீகமும் மனிதாபிமானமும் கலந்தே இருக்கிறது.

பார்ப்பன மரபுக்கெதிராக சிறுமியை வேதம் சொல்ல வைக்கிறார்; 'நான் இந்து அல்ல' என்று பிலார்மோனிக் குழுவினரிடம் கூறுகிறார்; கர்நாடக இசைக்கு கேவலம் சினிமாக்காரர்களாகிய நாங்கள் 'உயிரூட்ட' முடியுமா என்று அடிவெட்டு வெட்டுகிறார். கர்நாடக இசையின் சம்பிரதாயங்களை உடைத்து சநாதனிகளைச் சீண்டுகிறார்; கர்நாடக இசையின் வரம்புகளைக் கூறி அதன் முட்டாள்தனமான தன்னகங்காரத்தைச் சாடுகிறார்; 'கர்நாடக வித்துவான்கள் பாடும் இசையைப் போலவே நாய்குரைப்பதும் ஒரு இசைதான்' என்று அத்வைதிகளின் மொழியிலேயே வியாக்கியானம் செய்து அவாளின் வெறுப்பைத் தேடிக் கொள்கிறார்.

புகழ்மிக்க பாடகர்களும் இசையமைப்பாளர்களும் இசையுலகின் சூத்திரர்களாக அவாளிடம் கைகட்டி நிற்கும் திரையுலகில் இது அதிசயம்தான். மேடைக் கச்சேரியொன்று நடத்தி வசிட்டர்களின் வாயால் பிரம்மரிஷிப் பட்டம் வாங்குவதை வாழ்க்கை லட்சியமாகக் கொண்டிருக்கும் அடிமைத்தனத்தின் மத்தியில் இது கலகம்தான். இதுதான் இசைத்துறையின் உன்னதமான சிம்பனி எனும் உண்மையை நோக்கி அவரை நகர்த்தியிருக்கிறது.

சிம்பனி - அது தன்னுடைய ஆன்ம விடுதலையை சூனியத்தில் தேடியலைந்த தனியொரு இதயத்திலிருந்து கசிந்த இசை வடிவமல்ல; தங்கள் கைகளைப் பிணைத்திருந்த சங்கிலிகளை நொறுக்கி அதன் மூலம் ஆன்ம விடுதலையை சாதிக்க முயன்ற மனிதகுலத்தின் இதயத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பிய உணர்ச்சி வெள்ளம். அது இறைவனின் படைப்பாற்றலின் முன் வியந்து மண்டியிட்ட மனிதனின் அவலமல்ல; தன்னுடைய படைப்பாற்றலை அறிவித்த மனிதகுலத்தின் கம்பீரம்.

மேலைநாட்டின் புரட்சிகர இசைமரபுடன் தமது பறையும், குழலும் இணைந்து உருவாக இருக்கும் ஒரு பிரம்மாண்டமான இசை ஓவியம் தம் கண்முன் மங்கலாக விரிகிறது. இளையராஜாவின் ஆற்றல் இதைச் சாதிக்கும். அந்த ஓவியம் உருவாக்கவிருக்கும் உணர்வை அவரது சித்தாந்தம் தீர்மானிக்கும்.

அம்பேத்கரின் அரசியல் சட்டத்தை பத்திரப்படுத்திக் கொண்டு, இந்து மதத்தின் மீதான அவருடைய தாக்குதலை இருட்டடிப்பு செய்தது பார்ப்பனியம்! இளையராஜாவின் ஆன்மீகத்தையும் ஸ்ரீரங்கம் கோபுரத்துக்குக் கொடுக்கும் காசையும் வெட்கமின்றி பயன்படுத்திக் கொள்ளும் பார்ப்பனக்கும்பல், தன் இசை மடமையின் மீதும், போலித்தனத்தின் மீதும் இளையராஜா தொடுக்கும் தாக்குதலை மட்டும் கவனமாக இருட்டடிப்பு செய்கிறது. அதன் கோரமுகத்தைப் பச்சையாக உரித்துக்காட்ட இளையராஜா தயங்கினாலும், தனது எதிர் நடவடிக்கை மூலம் பார்ப்பனியம் தன் அற்பத்தனத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்கிறது.

''இருபத்தியொன்றாம் நூற்றாண்டெங்கும் உலகம் இளையராஜாவின் இசையில் திளைக்கும்'' என்கிறார் பிலார்மோனிக் குழுவின் நடத்துனர். இருபது நூற்றாண்டுகளாக முகவரியில்லாதவர்கள், வருணத்தில் சேராதவர்கள், என்று யாரை இருட்டடிப்பு செய்ததோ அவர்களின் ஒருவரின் பெயரை 'மேற்பார்வை முகவரி'யாகப் போட்டுத்தான் இசை உலகில் இன்று தன்னை பார்ப்பனக்கும்பல் அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

'மேஸ்ட்ரோ' என்று அன்பு கலந்த மரியாதையுடன் அழைக்கிறார்கள் பிலார்மோனிக் குழுவினர்; ஆசியன் என்கிறது உலகம்; இந்தியன் என்று அவசரமாக முத்திரையிடுகிறது பாராளுமன்றம்; அதுவும் ஒரு தமிழன் முன்மொழிந்தபிறகு. தமிழன் என்று அரவணைக்கிறது தமிழகம்.

ஆனால், பண்ணைப்புரத்தில், ராசய்யாவின் (இளையராஜா) சகோதரர்கள் மற்ற மனிதர்களுக்குச் சமமாக தேநீர்க்கடையில் ஒரே குவளையில் தேநீர் அருந்த இன்றும் விவசாயிகள் விடுதலை முன்னணி போராடிக் கொண்டிருக்கிறது.

அவர்களுக்கு முளைப்பாரி தெரியும்; தெம்மாங்கு தெரியும், ஒப்பாரி தெரியும்; இரண்டாயிரம் ஆண்டுகளாய் தங்கள் பாட்டன்மார் என்ன மெட்டுகளில் பாட்டுக் கட்டினார்களோ அவையெல்லாம் தெரியும்; அவை மட்டும்தான் தெரியும். அவர்கள் கைமாற்றித் தந்து சென்ற பறை தெரியும்.

அவர்களுக்கு சிம்பனி தெரியாது; புரியாது; அவர்களுக்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் ஒரு மெட்டு; இரண்டாயிரம் ஆண்டுகளாய் தங்களை அழுத்தும் சோகத்தை, தாங்கள் அழுத்தி வைத்திருக்கும் கோபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒரு மெட்டு - ஹார்மனியில் ஒரு இழை.

மாபெரும் மேதைகளின் வரிசையில் இன்னொருவன் உருவாகிவிட்டான் என்று பிலார்மோனிக் கலைஞர்கள் பெருமைப்படுகிறார்கள். பண்ணைப்புரத்துப் பண்ணைகளோ கவலைப்படுகிறார்கள் - இன்னொரு ராஜா உருவாகிவிடக் கூடாதே என்று. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி

இல 22

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 4 | 5 | 6 | | 8 |
| 9 யு | 10 | 11 | 12 | | 14 | 15 | |
| 17 | 18 | 19 | 20 | | | 23 த் | 24 |
| 25 | | 27 | 28 | 29 | | 31 | 32 |
| | 34 | | 36 | 37 | 38 | 39 | |
| 41 | 42 | 43 | | 45 | 46 | 47 | 48 |
| 49 | 50 | 51 பு | 52 | | 54 ன் | | 56 |
| 57 | 58 | | 60 | 61 | 62 | | 64 |

உங்கள் பாவனைக்கு:-

அலுவலகப்பாவனைக்கு:-

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

c:25 ,No:22

afs. ______________________

______________________

______________________

______________________

www.tamilarangam.net

# சஞ்சீவி
## ஆறு மலர்களுக்கான சந்தா

| | |
|---|---|
| Switzerland<br>France<br>Italy<br>London<br>Germany | 25 u$ |
| Canada<br>Australia | 29 u$ |
| Sweden<br>Norway | 125kr. |
| Danmark | |

**காசோலை எடுக்கவேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்**

A/C.NO.7601-408695-3
Tamilsk Dansk Venskabs Forening
Vestjysk Bank
7500-Holstebro,
Danmark.

**காசோலை அனுப்பவேண்டிய முகவரி**

CHANCHIVE
Danmarksgade.10
7500 Holstebro
DANMARK

"மறுக்கப்பட்டு, பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
கருத்துப்பரிமாற்றலை உருவாக்குவதற்கு
எல்லோரது கருத்துக்களும்,
விமர்சனங்களுமே
வழிவகுக்கும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**CHANCHIVE**
**Danmarksgade.10**
**7500 Holstebro**
**DANMARK**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்